411

**Registered No. M. 878**

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

**A Tamil Monthly Journal**

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization

தொகுதி 6 — 1916-ம் ௵ ஏப்ரல் ௴ — ராக்ஷஸ ௵ பங்குனி ௴ — பகுதி 12.

அ. ரங்கசாமி ஐயர், B. A. B. L., F. T. S, பத்திராதிபர்

வருஷ சந்தா ௹ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

4-12

# பொருளடக்கம்.

## CONTENTS.

பக்கம்.

1. தற்கால நிலைமை.—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் 401

(From the Front)—R. Rangaswamy Iyer.

2. பத்திராசிரியர் பக்கம். 415

Editor's Page

3. கைங்கர்யம் (வித்யா தர்ம பரிபாலன ஸபை)

ஆர். ரங்கஸ்வாமி ஐயர் 418

Service (Vidyadharma Paripalana Sabha)

R. Rengasamy Iyer.

4. மீராபாய் (ஓர் நாடகம்)—R. ஸ்ரீநிவாஸ ஐயர். 421

Meerabhai (A Drama):—R. Sreenivasa Iyer.

5. சமாசாரம். 427

News.

6. புத்தக வரவு. 438

Review of books.

7. தியானக்கிரம விஷயம்—கே. யஸ். ராமசந்திர ஐயர்.

442

Meditations from At the Feet of the Master. } -K. S. Ramachandrier.

# பூர்ணசந்திரோதயம்.

| | | |
|---|---|---|
| தொகுதி 6 | 1916-ம் ஞு ஏப்ரல் மீ<br>ராக்ஷஸ ஞு பங்குனி மீ | பகுதி 12. |

## தற்கால நிலைமை.

நம்முடைய மாதிரு பூமியாகிய இந்தியாவை முன்னுக்குக் கொண்டுவரும் வண்ணம் பாடுபட்டு வரும் இந்தியர்களின் மத்தியில் நமது பிரஹ்மஞான சபையின் அங்கத்தினர்கள் செய்து வரும் கைங்கரியம் மிகவும் பாராட்டத்தக்கது. சேலம் செண்ட்ரல் ஜயிலில் கைதிகளுக்கு மதத்தையும் நன்னெறியையும் புகட்டுமாறு உபதேசக வேலையை அங்கீகரித்து 1915-ம் வருஷம் முழுவதும் அக்கடமையை நன்கு நடாத்தி வந்த எஸ். முத்துசாமி ஐயர் என்ற அந்தணர் ஜயில் இன்ஸ்பெக்டர் ஜனரலவர்களுக்கு அனுப்பிய அறிக்கைப் பத்திரத்தில் பின்வரும் முக்கியமான விஷயங்களைப் பற்றிக் கூறியுள்ளார். "கைதிகளில் சிலர் புதுக்

கைதிகள்; சிலர் பழைய கைதிகள். பிந்தியவர்களுக்குப் பயன்படுமாறு புத்தி கூறுவது சிரமசாத்தியம். புராண இதிகாசாதிகதைகள் மூலமும் உபந்யாசங்கள் மூலமும் நன்னெறியைப் புகட்டுவதோடுகூட அடிக்கடி கைதிகளின் மனதை பக்தியாலும், கானத்தாலும் உருகும்படி செய்தல் அதிகப் பயன் தரும் என்று எண்ணுகிறேன். அதற்காக சரியான பக்க வாத்யங்களோடு பாகவதரைக்கொண்டு ஹரிகதைகள் நடப்பித்தால் கானத்தினாலும் கதாரசத்தாலும் மனதுருகிச் சீர் படும். மேலும் ஜயிலில் உபந்யாசங்களுக்கு உபயோகப்படும் அறைகளில் தேவதைகளுடையவும் மகான்களுடையவும் அவதாரங்களுடையவும், மகரிஷிகளுடையவும் படங்களையும் சர்க்கார்ச் செலவில் வாங்கித் தொங்க விட்டிருக்கவேண்டும். அந்த ஜெயிலில் 700 கைதிகள் இருக்க சுமார் 150 பேர்கள் மட்டும் சாதாரணமாக உபந்யாசங்களுக்கு வருகிறார்கள். உபந்யாச காலத்தில்பலர்களுக்கு வேறுவேலைகள் கொடுக்கப்படுகிறதாகக் கேள்வி. எல்லோரும் அந்த உபந்யாசங்களுக்கு வரும்படி செய்வதற்காக உபந்யாச காலங்களில் வேறு வேலைகள் கொடுக்காதபடி செய்யவேண்டும், தூக்கில் போடும்படி உத்திரவான கைதிகளுக்கு ஆறுதல் செய்யவேண்டியது மிகவும் அவசியமாயிருத்தலால் முன்னாடியே இந்த தேதிகளில் இந்த கைதிகளை தூக்கில் போடுவதாக ஜாப்தாவை உபந்யாசகரிடம் கொடுத்தல் சிலாக்யம். மேலும் ஜயிலைவிட்டு வெளியேறப் போகிற கைதிகளுடைய ஜாப்தாவைக் கொடுத்தால் அவர்களுக்கு உபந்யாசகர் நற்புத்தி கூறுவது இலகுவாகும். இவ்விதம் சிற்சில சீர்திருத்தங்கள் செய்தால் மிக்க நன்மையுண்டாகும் என்பதில் சந்தேகமில்லை.'' மேற்கூறிய விஷயங்கள் ராஜாங்கத்தாரால் நன்று கவனிக்கத்தக்கவைகள்.

***

''பெற்றோருபாத்தியாயர்களின் சங்கம்'' 1915-ம் வருஷம் டிசம்பர்மீ 28-ம் தேதியன்று பம்பாயில் துவக்கப்பட்

டது. (1) அகத்திலும் பள்ளியிலும் சிறுவர் சிறுமிகளை தேஹசிக்ஷை செய்வதை யொழித்தல், (2) பெற்றோருபாத்திமார்களுக்கு சிறியாரின் போதனுமுறையில் புதிதாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிற அபிப்பிராயங்களைப் புத்தகங்கள், துண்டுப் பத்திரிகைகள் வாயிலாகப் பரவச் செய்தல். இவ்விரண்டும் அதன் நோக்கங்கள். கனம் டி. சதாசிவ ஐயரவர்கள் அக்கிராசனபதி. பி. கே. டிலாங் எம். ஏ., எல். எல். பி., சி. எஸ். திரிலோகேகர் எம். ஏ., வி. ஜீனராஜதாசர் எம். ஏ., முதலிய பலர் உபஅக்கிராசனபதிகள்; குவாலியர் ராஜ்யத்தின் ராஜதானியான குவாலியரில் விக்டோரியா கல்லூரியில் சரித்திர அத்தியாபகரான ஆர். கே. குல்கரணி எம். ஏ., எல். எல். பி., காரியதரிசி. அடையாற்றிலிருக்கும் எஸ். வி. கண்டேகர் என்பவர் உபகாரியதரிசி. இந்தச் சங்கத்தில், பெற்றோர்களும், உபாத்தியாயர்களும் மற்றவர்களும் அங்கத்தினராகச் சேரலாம். அங்கத்தினராகச் சேருவோர் எல்லோரும் எவ்விடத்திலும் குழந்தைகளை தேஹசிக்ஷை செய்யக்கூடாது என்று ஒப்புக்கொள்ளவேண்டும். அவர்களுக்கு யாதொரு சந்தாவும் கிடையாது. ஆனால் மனமுவந்துதவும் தொகைகள் வந்தனத்துடன் அங்கீகரிக்கப்படும். அந்த சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்ற புத்தகங்கள் துண்டுப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படும். இதைப் பற்றியறிய விரும்புவோரும், அங்கத்தினராகச் சேர விரும்புவோரும் மேற்கண்ட காரியதரிசியவர்கட்கு எழுதலாம். கருணையங்கடலாகிய பெரியோர் அவதரிக்கப் போவதாகப் பறை சாற்றப்படும் இந்நாளில் இந்தியாவில் குழந்தைகளைக் கருணையாலன்றோ பரிபாலிக்கவேண்டும்.

***

அடியாத மாடு படியாதென்றும், அடியுதவுவதுபோல் அண்ணன் தம்பி யுதவ மாட்டான் என்றும் பழமொழிகளை வேதவாக்கியமாய்க் கொண்டு குழந்தைகளை "கண்விழிகளை

த்தவிர உடம்பு பூராவையும் உரித்துவிடுவதாக"ப் பயமுறு த்துபவர்களும், கொஞ்சமும் இரக்கமின்றி கையாலும் கோலாலும் புடைப்பவர்களும் நிறைந்த இந்நாட்டில் இந் தச் சங்கத்தின் ஆவசியகத்தைப் பற்றி விரித்தெழுதவேண் டியதில்லை. எல்லோரும் இந்த சங்கத்தில் அங்கத்தினரா கச் சேர்ந்து பயனடைவார்களாக.

***

சென்ற சஞ்சிகையில் ஹிந்து யூனிவர்சிடியின் பிரதி ஷ்டையைப் பற்றிச் சொல்லப்பட்டது. நம்முடைய மகம் மதிய சகோதரர்களும் அதேமாதிரி மகம்மதிய யூனிவர்சிடி யும் ஸ்தாபிக்கவேண்டும் என்று அவாவுடையவர்களாய் அத ற்காகப் பிரயத்தினப்படுகிறார்கள் என்று அறியச் சந்தோ ஷப்படுகிறோம். ஹிந்து யூனிவர்சிடியில் அநேகம் விஷயங் கள் ஹிந்துக்கள் கோரியபடி கிடைக்காவிடினும் கிடைத்த மட்டில் நலம் என்று இனிமேல் இது சரியானபடி நடை பெற்றால் அநுகூலமான காலம் வரும்போது வேண்டிய சீர் திருத்தங்கள் செய்து கொள்ளலாம் என்றும் எவ்வாறு தற் காலத்தில் ஹிந்துக்கள் சந்துஷ்டி யடைந்திருக்கிறார்களோ, அவ்வண்ணம் மகம்மதியர்களும் இந்த ராஜப்பிரதிநிதியவர் கள் காலத்திலேயே பிரயத்தினப்பட்டால் தாங்கள் கோரி னபடி முழுவதும் கிடைக்காவிட்டாலும், ஹிந்து யூனிவர் சிடியைப் போலாவது நிச்சயமாய் மகம்மதிய யூனிவர்சிடி யும் கைகூடும் என்பதில் ஐயமில்லை.

***

வங்காளத்தில் பங்கூரா என்னும் ஜில்லாவில் இப் போது மிகவும் கொடுமையான பஞ்சம் நடக்கின்றது அந்த ஜில்லாவானது வங்காளத்திலுள்ள ஜில்லாக்களில் ஏழைமைப் பட்டது. 2,621 சதுரமைல் பரப்புள்ள அந்த ஜில்லாவிலுள்ள 12½ லக்ஷம் ஜனங்களில் 8 லக்ஷம் ஜனங்கள்

சோற்றுக்கு விதியற்று, நடை பிணங்களாயிருக்கிறார்கள். சீக்கிரம் அவர்களுக்கு உதவி போய்ச் சேராதுபோனால் அவர்கள் உயிர் நீக்கவேண்டியதைத் தவிர வேறு கதியில்லை. 1913-ம் வருஷத்தில் அதிக வெள்ளத்தால் வெள்ளாண்மையெல்லாம் அழிந்தது. 1914-ம் வருஷத்தில் மழை போதாததால் பஞ்சமாய்ப் போயிற்று. 1915-ம் வருஷத்திலும் சுபிக்ஷம் இல்லாததால், அந்தோ! அந்த ஜில்லா ஜனங்கள் யாது செய்வார்கள்! உடுக்கத்துணியற்று உண்ண உணவற்று தோலால் மூடிய சுத்த எலும்புக் கூடுகளாய் அலையும் ஜனங்கள் என்ன செய்வார்கள்? மறுபடியும் 7 மாசம் செல்லுமாம் பயிர்கள் விளைந்து பலன் கிடைக்க. இனம் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபா இருந்தால் போதுமானது. 7 மாதங்களுக்கு 7 ரூபாவும் போர்வைக்காக ரூபா ஒன்றும் ஆக 8 ரூபா வேண்டும். அப்படி 8 லக்ஷம் ஜனங்களுக்கு ரூபாய் வேண்டுமே! என் செய்வது? சர்க்காரில் பஞ்சத்துக்காகவென்று உதவப்பட்ட 5 லக்ஷம் ரூபாய் எம்மட்டுக்குப்போதும்? இவ்வாறு சகிக்க முடியாத கஷ்டங்களையடைந்து பரிதபிக்கும் மன்னுயிர்களுக்குப் பேருதவி செய்ய ராமகிருஷ்ண மிஷன் சபையாரும், வங்காள ஜனசமூக கைங்கரிய சபையாரும் முன் வந்திருக்கிறார்கள். ஆனால் பணமில்லாமல் கருணையால் மட்டும் என்ன உதவி செய்ய முடியும்? பத்திரிகை வாயிலாகவும், நிருபங்கள் மூலமாயும் வேண்டிக்கொள்ள பம்பாயில் ஒரு பெரிய மகாநாடு கூடப்பட்டு இந்த பஞ்சத்தின் கொடுமையை ஒருவாறு சாந்தம் செய்ய பொருளுதவி கொடுக்கப்பட்டது. அம்மாதிரியே சென்ற மார்ச்சு ௴ 2உயன்று சென்னப்பட்டணத்தில் ஒரு பெரிய சபை கூட்டப்பட்டது.

***

காலம் சென்ற கோகலேயின் பெயரால் அலங்கரிக்கப்பட்ட (ஒய். எம். ஐ. ஏ. சபையாரின்) பெரிய ஹாலில் அம்

மஹான் எந்தப் பொது ஜனங்களுக்குப் பாடுபட்டாரோ, அந்தப் பொது ஜனங்களுடைய கைங்கரியத்துக்காக முதல் முதலாய் இந்த பெரிய சபை கூடியது மிக்க பொருத்தமுள்ளதே. கனம் நரசிம்மேசுவர சர்மா அவர்கள் அக்கிராசனம்வகிக்க திவான்பஹதூர் கோவிந்தராகவையர், டி. ரெங்காச்சாரியர், சி. பி. ராமசுவாமி ஐயர், ஏ. ரெங்கசாமி ஐயங்கார், பி. பி. வாடியா, எம். எஸ். காமத், முதலிய சீமான்களும் கனம் சதாசிவ ஐயரவர்கள் மனைவியாரும் அன்னிபெஸண்டு அம்மையாரும் பஞ்சத்தின் கொடுமையைப் பற்றி மிகவும் உருக்கமாகப் பேசினார்கள். அவ்விடத்திலேயே 28,000 ரூபா கொடுப்பதாக வாக்களிக்கப் பட்டது. இனியும் பொருளுதவி தேடுவதற்காக ஒரு நிர்வாஹ சபை நியமிக்கப்பட்டது.

***

இந்தியாவானது ஒரே சரீரமாயும் அதில் ஒவ்வொரு மாகாணமும் ஒவ்வொரு அங்கமாகவு மன்றோ கருதப் படுகின்றது. வங்காளமாகிற ஒரு உறுப்பில் வலி தோன்றினால் மற்றொரு உறுப்பாகிய சென்னை நமக்காவதென்ன என்று சும்மா இருக்க முடியுமா? அந்த பெரும் சபையில் பிரசங்கம் செய்த ஒவ்வொருவரும் ஹிருதய பூர்வமாக மனம் கரைந்துபேசி கைநிறையப் பணம் கொடுத் துதவியதைப்பார்த்துக்கேட்ட யாராவது நம்முடைய இந்தியாவானது படத்தில் வரையப்பட்ட ஒரு தேசம் மட்டும் தான், ஆனால் ஐக்கிய பாவமற்றது என்று சொல்ல முடியுமா? இதுவே நம்முடைய மாதா தூங்கவில்லை, பூர்ணமாய் விழித்துக்கொண்டாள் என்பதற்குப் போதிய ருசுவாகும்.

***

எந்த தேசத்திலும் மன்னுயிர்கள் பாடு படுகிறதாய்க் கேட்டால் இயன்ற உதவி புரிவது கருணலேசமுள்ள ஜன

ங்களுக்கு இயற்கை. அப்படியிருக்க இந்தியா மாதாவின் உதரத்தில் தோன்றியவராய், நம்மைப்போல் ஒரே லாப நஷ்டத்துக்கும், கஷ்ட சுகங்களுக்கும் பாத்தியப்பட்டவராயிருக்கும் இந்தியர்கள் பால் மனமிரங்காதவர் உண்டோ? இத்துணை கஷ்டப்படும் ஜனங்களுடைய குணமோ எவ்வளவு மெச்சத் தகுந்தது! ஆகாரத்துக்காக சீட்டுகள் கொடுக்கும் இடத்துக்குக் கூட்டம் கூட்டமாய் வந்திருந்த ஜனங்களில் புருஷர்கள் ஒதுங்கி நின்றுகொண்டு, ஸ்திரீகளும் குழந்தைகளும் சீட்டு வாங்கிப் போகும்படி விட்டு, பிற்பாடு தாங்கள் சீட்டு வாங்கினர்களாம். இவ்வளவு குணசாலிகளான ஜனங்களுக்கும் இத்தகைய கஷ்டம் வாய்த்ததே. இதைத் தவிர்க்க இந்தியர்கள் எல்லோரும் முன் வருவார்கள் என்று நம்புகிறோம்.

***

மதுரை காலேஜ் ஹாலில் 1916ம்-ளு மார்ச்சுமீ 5ல சாயங்காலம் 6 மணிக்கு ஒரு முக்கியமான பிரசங்கம் நடந்தேறியது. புனு நகரத்தில் அநாத பாலிகாசிரமம் என்ற விதவாகிருஹத்தையும், மஹிலா வித்யாலயத்தையும் ஸ்தாபிப்பதில் முதன்மையான சிரமத்தை வஹித்தவரும் தற்காலத்தில் புனுவில் ஸ்தாபிக்கப் பெறப்போகிற பாரத வர்ஷீய மஹிலா வித்யாபீடம் என்ற ஸர்வ இந்தியா ஸ்திரீகள் யூனிவர்சிடி விஷயமாய் தேசசஞ்சாரம் செய்து வருபவருமான புரோபஸர் கார்வே என்ற மஹான் தாம் தற்போது பிரவிர்த்தித்த விஷயமாகிய ஸர்வ இந்தியா ஸ்திரீகள் யூனிவர்சிடியைப் பற்றி உபந்யாசம் செய்தார். இவரைப் பார்த்தால் மிகவும் சாமன்யமான மனிதனுகத் தோன்றுகிறுரே யொழிய வேறொருவராலும் முடியாத காரியங்களைச் சாதித்த பெரியாராய்த் தோன்றவில்லை. தனக்கு நன்ருகப்பேசத் தெரியாதென்று சொல்லித்துவங்கின பிரசங்கத்தில் மிகச்சுருக்கமாகவும் தெளிவாகவும், எல்லோருடைய மனதைக் கவரும்படிக்கும் தாம் வந்த காரியத்தைவிளக்கிக்

காட்டி சபையோரனைவரையும் தம் வசமாக்கினர். உண்மையினுடையவும் உற்சாகத்தினுடையவும் சக்தியை யாராளக்க முடியும்? ஸ்திரீகளுக்கு சர்வ காலாசாலை ஏற்படுத்தவேண்டிய ஆவசியகம் என்னவெனின், தற்போதிய காலத்தில் பாதிரிமார்களாலும் கவர்ண்மெண்டாராலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற கல்லூரிகளிலும், உயர்தரக் கலாசாலைகளிலும் ஆங்கிலத்திலேயே சகல விஷயங்களையும் கற்பிக்கிறார்கள். அதனால் சொற்பகாலத்தில் ஸ்வபாஷையினால் கற்பித்தாலறியக்கூடிய விஷயத்தை வெகு சிரமப்பட்டு அதிக காலத்தில் கற்கவேண்டியிருக்கிறது. ஆண்பிள்ளைகளுக்கும் அம்மாதிரியே கற்பிக்கிறார்களாயினும், அவர்கள் மதராஸ் முதலிய யூனிவர்சிடியிலும் சர்க்காரிலும் யோக்கியதா பத்திரம் பெற்று அதன் உதவியால் தங்களுடைய ஜீவனோபாயம் தேடவேண்டியிருப்பதால், அவர்களை சீக்கிரத்தில் சகல விஷயங்களையும் ஸ்வபாஷையின் மூலமாய் கற்கும்படி செய்தலை சர்க்காரிலும் யூனிவர்சிடியிலும் ஒத்துக் கொள்ளார்களாகையால் அது கூடாது. ஆனால் இந்தியாவில் ஸ்திரீகள் பெரும்பாலும் ஜீவனோபாயம் தேடவேண்டுவதில்லை. ஆகையாலவர்களுக்கு வித்யைகற்பதுதான் நோக்கமேயொழிய வேலைக்குப்போகவேண்டுமென்பது முக்கியமான கருத்தில்லை. ஆகையால் மதராஸ் பம்பாய் முதலிய யூனிவர்சிடிகளில் யோக்கியதாபத்திரம் பெறவேண்டியதும் ஆங்கிலபாஷை வாயிலாய்ச் சகல விஷயங்களையும் கற்கவேண்டியதும் அவசியமில்லை. ஸ்வபாஷையின் வாயிலாய்க் கற்பிப்பதையே முக்கியகருத்தாயுள்ள ஸ்திரீகளுக்கென்ற யூனிவர்சிடியை ஸ்தாபித்தல் மிக்க நலம்பயக்கும். மேலும் புருஷர்களுக்கு கற்பிக்க வேண்டிய விஷயங்கள் வேறு; ஸ்திரீகள் கற்கவேண்டிய விஷயம் வேறு. ஸ்திரீகள் கற்க வேண்டிய விஷயங்களை அவசியமாயவர்கட்குக் கற்பிக்கும்படிக்கும் அவைகள் சம்பந்தமாய் யோக்கியதா பத்திரங்கள் கொடுக்கவும் ஒரு யூனிவர்சிடி வேண்டுவது அவசியம்.

மேலும், ஸ்திரீகள் கற்கக்கூடிய காலம் மிகவும்சொற்பமாயி ருப்பதால், அவர்கள் ஆங்கிலத்தின் வாயிலாய் 7வருஷம்கற்கக்கூடியதை சுயபாஷையில் 5வருஷத்தில் கற்கலாம். அது பெரிய லாபம். மேலும் எந்த தேசத்திலும் அந்நியபாஷை மூலமாய் கல்வி கற்பது என்பது கிடையாது. அந்த துரதிருஷ்டம் இந்தியாவுக்கே வாய்த்தது. 50வருஷத்துக்கு முந்தி ஜப்பானில் படிப்பு ஸ்வல்பமாயிருந்தது. ஆனால் ஜப்பானியர்கள் கலாசாலைகளை ஸ்தாபித்து சுயபாஷையில் கற்பித்ததால் அந்த நாடு கல்வியில் முதிர்ந்திருக்கின்றது. ஜப்பான் யூனிவர்சிடிகளின் கௌரவம் உலகெங்கும் பரவியிருக்கின்றது. ஆனால் இந்தியாவிலோ 50வருஷத்துக்கு முன் இருந்த படிப்புதானிப்போதும் இருக்கிறது. நமக்கு சுயபாஷையாகிய ஸம்ஸ்கிருதத்தையும் நாம் ஆங்கில மூலமாய் கற்கிறோம் என்றால் இதை விட அவமானம் என்ன வேண்டியிருக்கிறது? இதைக்கேட்டு 50வருஷத்துக்குப் பின் வரும் நம்மவர்கள் நகையார்களா? ஸ்திரீகளுக்கு ஸ்வபாஷையில் கற்பித்து உயர்தர ஞானம் புகட்டுவது ஸாத்தியம் என்று காட்டினால் புருஷர்கள் யூனிவர்சிடிகளிலும் அதே மாதிரியான சீர்திருத்தம் செய்யக் கூடும். ஆகையால் ஸ்திரீகள் யூனிவர்சிடி அவசியம். புனா நகரத்தில் ஸ்தாபிக்கப் போகிற யூனிவர்சிடியை சர்வ இந்தியா யூனிவர்சிடியென்று எப்படிச் சொல்லலாம், இந்த பிராந்தியங்களுக்கு அதினால் என்ன பயன் என்று இரண்டு கேள்விகள் நியாயமாய் தோன்றலாம். இந்தியாவின் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும், உத்தேசித்திருக்கிற யூனிவர்சிடியின் "செனட்" என்ற ஆலோசனைச் சபைக்கு, அங்கத்தினரை தேர்ந்தெடுக்கிற பாத்தியம் அததற்குண்டு. மேலும் பூனாவிலிருக்கும் மத்திய ஆலோசனைச் சபையைத்தவிர வெவ்வேறு மாகாணங்களுக்கும் மாகாண ஆலோசனைச் சபையை ஸ்தாபித்து அதன் மூலம் அந்த அந்த மாகாணங்களில் உபயோகிக்கவேண்டிய புத்தகங்களைத் தீர்மானிக்கவும், ஒரே கேள்வித்தொகுதியை

அந்தந்த தேசபாஷையில் மொழிபெயர்த்து பரீக்ஷை செய்யவும் உத்தேசம். அப்படிச் செய்வதால் மற்ற மாகாணங்களிலுள்ள பள்ளிகளையும் இந்த யூனிவர்சிடியின் ஆளுகைக்குள் சேர்க்கலாம். தற்காலத்தில் இந்தியா முழுவதும் ஒற்றுமையாயிருக்கவேண்டியது ஈசுவர சங்கற்பமென்று பெரியார்கள் சொல்லுவதால் அந்த ஒற்றுமைக்கு இதுவும் ஒரு வழியாகவும் இருக்கிறது. மேலும், ஒரு யூனிவர்சிடியில் இவ்விதம் சித்தியடைந்தால், அம்மாதிரி மற்ற யூனிவர்சிடிகளும் உண்டாகலாம். இதுவும் இந்தியா பெறும் லாபம் அன்றோ? ஆகையால் எல்லோரும் இதற்குப் பொருளுதவி செய்யவேண்டுமென்று புரொபசர் கார்வேயவர்கள் எடுத்துரைக்க, மதுரையிலுள்ள பலர் பொருளுதவி செய்வதாய் வாக்களித்தார்கள்.

***

மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரின் முயற்சியால் சென்னை அரமனைக்காரன் தெருவில் மிகுந்த பணச் செலவிட்டு ஸ்தாபிக்கப்பட்ட ஒய். எம். ஐ. ஏ. கட்டிடத்தில் அடிக்கடி நம் நாட்டுக்கு ஹிதகரமான பல்வேறு காரியங்கள் நிகழ்கின்றன. அவைகளில் 1916-ம் வருஷம் பிப்ரவரி மாசம் 19-ம் தேதியன்று திறக்கப்பட்ட சித்திரப்படக்காட்சி சிறந்தது. "கீழ்நாட்டு சிற்ப சபை"யாரால் இந்தக் காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. கல்கத்தாவில் ஆசியாக் கண்டத்து ஆஸ்தானகவியென்று ராஜப் பிரதிநிதியாலழைக்கப்பட்ட ரவீந்திரநாத டாகோருடைய சகோதரர் குமாரனான அவனீந்திரநாத டாகோருடையவும் அவருடைய சிஷ்யர்களுடையவும் சித்ரங்கள் சில வருஷங்களுக்கு முன் பிரான்சு தேசத் தலைநகராகிய பாரிஸ் மாநகரத்தில் காட்சியாய் காட்டப்பட்டன. அவைகளை மேனாட்டு நிபுணர்கள் மிகவும் மெச்சினார்கள். அப்பால் அவைகளை இங்கிலாந்தில் லண்டன் மாநகரத்திலும் சித்திர காட்சிசாலையில் அரங்கேற்றுவிக்க அவ்விடத்திய அறிஞர்கள் அவை

423



களை ஆமோதித்து அங்கீகரித்தார்கள். மேனாட்டு சித்திரந் தீட்டுவோர் இயற்கை வஸ்துக்களைப் போல் வரைவதில் அதிக சூக்ஷ்மமான நிபுணர்களாயினும், இந்த இந்திய சிற்பிகளின் சாமர்த்தியம் அவர்களிடம் வாய்த்தது இல்லை. மேனாட்டுப் படத்தைப் பார்த்த ஒருவன் இது எவ்வளவு அழகாயிருக்கின்றது. இயற்கை வஸ்துவைப் போலவே ஒவ்வொரு அம்சத்திலும் ஒத்திருக்கின்றது. இதை வரைந்தவன் சாமர்த்தியம் தான் எவ்வளவென்று வியப்பான்: மேற்கூறிய இந்தியர்களின் படங்களைப் பார்த்தால் சிற்பியின் அந்தக் கரணத்தில் தோன்றி அப்படத்தில் சூசிக்கப்பட்ட உட் கருத்தை அவனவன் தேற்சிக்குத் தகுந்தவாறு உணருகிறான். ஆதிகவி வால்மீகியார் முதலிய கவி சிரேஷ்டர் பாக்களைக் கேட்டு முதலில் தோன்றிய கருத்துடன் மறுபடி கேட்கக் கேட்க, பற்பல அந்தரங்கமான உட் கருத்துக்கள் எங்ஙனம் தொனிக்கின்றனவோ, அங்ஙனம் இந்தச் சித்திரங்களை உற்று நோக்குங்கால் நோக்குவானுடைய பக்குவத்துக்குத் தக்கவாறு புதிது புதிதாக அழகும், தத்துவமும் தோன்றும்

***

இவ்வண்ணம் புகழ்ப் பெற்ற படங்கள் நம்முடைய ராஜதானியில் பொது ஜனங்களுடையவும் முக்கியமாய் வாலிபர்களுடையவும் பார்வைக்கு வரவேண்டிய தவசியமெனக் கருத்துக் கொண்ட சிலரால் வங்காளத்திலிருந்து தருவித்து ஒய், எம். ஐ. ஏ. கட்டிடத்தில் காட்சியாய் வைக்கப்பட்டன. மாட்சிமை தங்கிய நமது கவர்னரும் மற்றும் சென்னையிலுள்ள கனவான்களும் படங்களை மெச்சினார்கள். ஐரோப்பிய படங்களை மாத்திரம் இதுவரை மெச்சிப் பழகியவர்கள் வேறு மாதிரியான இப்படங்களின் பெருமையை யறியார்கள். இருந்தபோதிலும் தாங்கள் முன்னால் கொண்டிருந்த அபிப்பிராயங்களை ஒதுக்கிவைத்து இப்ப

டங்களின் பெருமையை அறியவேண்டுமென்ற அவாவின ராய்ப் பன்முறை போய்காட்சியைப் பார்க்கின் இப்படங்களின் சிறப்பை நன்கு அறிவதுடன் தென் இந்தியாவிலும் சித்திரம் வரையும் சாமர்த்தியம் அதிகரிக்கும் என்பதில் ஐயம் இல்லை.

***

பம்பாய் ராஜதானியில் சென்ற சில வருஷங்களாக சலவைக் கல்லில் மனிதர்கள்போல உருவங்கள் சமைக்கும் திறமைகொண்ட மாத்ரே யென்றவர் மேனாட்டு சிற்பிகளைக் காட்டிலும் அழகாயும் செம்மையாயும் சிலைகள் அமைத்து அதனால் இந்தியாவுக்கு பெருமையை உண்டாக்கியிருக்கின்றார். மேலும் இந்தியாவின் சங்கீதத்தின் பெருமையை இப்போது தான் மேனாட்டார் கொஞ்சம் கொஞ்சமாக அறிய ஆரம்பிக்கிறார்கள். இம்மாதிரி சிற்பத்தின் பல விபாகங்களாகிய, சிலை சமைத்தல், ஓவியந்தீட்டல், சங்கீதம், நாடகம் இவைகள் ஒவ்வொன்றிலும் இந்தியாவின் சீர்மை ஓங்கி வளருகின்றது. இத்துடன் நிற்காமல் மேன்மேலும் அந்த சிறப்பு பெருகி வளரும் என்பதில் சந்தேகமில்லை. அழகு என்பது பராசக்தியின் முக்கியாம்சமன்றோ! இந்தியாவானது எவ்வாறு ஞானத்திலும் பலத்திலும் மேன்மையடைய வேண்டியதோ அதுபோல சௌந்தரியத்தின் அம்சமாகிற சிற்பத்திலும் பெருமை யடைய வேண்டியது இன்றியமையாதது அல்லவா?

***

மேற் கூறப்பட்டது சித்திரப் படங்கள் கண் காட்சியின் விமர்சை. பரோடா ராஜ்யத்து கைக்வார் மஹாராஜா அவர்கள் உத்திரவின்படி அந்த ராஜ்யத்து மந்திரியும், நம்முடைய ராஜதானியில் பிறந்து மைசூர் திருவாங்கூர் ராஜ்யங்களுக்கு திவான் வேலையை கியாதியுடன் வகித்தவருமான வி. பி. மாதவராயர் அவர்கள் பார்வையின் கீழ்

நாளிது மார்ச்சுமீ 20உயன்றும் பிந்திய சிலதினங்களிலும் நடைபெறப்போகிற சர்வ இந்தியா சங்கீத சபைக்கு இந்தியாவிலுள்ள கியாதி பெற்ற சங்கீத வித்வான்களும் சங்கீத சாஸ்திர நிபுணர்களும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த சபை மிகவும் சிறாக நடைபெற்று இந்திய சங்கீதத்தை அபிவிருத்தி செய்யும் என்று எல்லோராலும் எதிர்பார்க்கப் படுகிறது.

***

பங்களூரில் 1913-ம் வருஷம் அக்டோபர் மீ 1உயில் "மஹிளா சேவா சமாஜம்" ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அதன் கருத்துக்களாவன. (1.) கல்வி கற்பிப்பதற்காகவும், வைத்தியம் செய்வதற்காகவும், பொது ஜன கைங்கரியத்திற்காகவும், ஸ்திரீகளைப் பழக்குவது (2) ஸ்திரீகளுக்காக ஸ்திரீகளைக் கொண்டு கல்வி கற்பித்தல், வைத்யம் செய்வித்தல், பரோபகாரத் தொழில்கள் செய்வித்தல், (3) ஸ்திரீகளுடைய உபகாரத்திக்காக சமாஜத்தாரால் யுக்தமென்று தீர்மானிக்கிற இவ்வித இதர காரியங்களை முடித்தல். இந்த சமாஜத்துக்கு ஸ்திரீகள் ஆலோசனைச் சபையொன்று 12 அங்கத்தினருடையது. புருஷர்கள் நிர்வாஹ கமிட்டி யொன்று 12 அங்கத்தினருடையது. முந்தியதற்கு மைசூர் சீப் கோர்டு ஜட்ஜு சந்திரசேகர ஐயர் அவர்கள் மனைவியாரும் பிந்தியதற்கு திவான் பஹதூர் சக்கிரவர்த்தியும் அக்கிராசனபதிகள்.

***

வயது வந்த ஸ்திரீகளுக்கு பகல் 2மணி முதல் 5மணி வரை நாடோறும் இங்கிலீஷ், தமிழ்பாஷை, கணக்கு, தையல், முதலிய பாடங்கள் கற்பிக்கப் படுகின்றன. சர்க்கார் கல்வி இலாகாவில் நியமிக்கப்பட்ட ஒரு உபாத்தினியும், மற்றொரு உபாத்தினியும், தையல் கற்பிக்க ஒரு தையற்காரனும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். இப்பள்ளியில்

பயில்வோருக்குச் சம்பளமில்லை. ஆனால் இந்த சமாஜத்தார் சந்தாவாலும் மற்றவர்கள் மனமுவந்துதவும் பொருளுதவியாலும் இக்காரியம் நிகழ்கின்றது. பயிலும் மாணுக்கர்களை உற்சாகப்படுத்துவதற்காக ராவ் பஹதூர் வி. ரெங்கசாமி ஐயங்கார் இரண்டு பேருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து வருகிறார். சனிக்கிழமை தோறும் "கிருஹ நிர்வாஹவித்தை"யை ஸ்திரீகளுக்குக் கற்பிப்பதற்கு ஒரு உபாத்தியாயர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் சம்பளம் மீ 1-க்கு ரூ. 20யும் திவான் விசுவேசுவரய்யா கொடுத்து வருகிறார். அபாயம் நேரிடுங்கால் "முதலுதவி" புரிவதற்குத் தெரியும்வண்ணம் டாக்டர் பி. நஞ்சய்யா அவர்கள் கற்பித்து வருகிறார். இந்த சமாஜத்துக் காரியங்களை ஸ்ரீமதி ரங்கம்மாள் காரியதரிசியாய் நின்று நிறைவேற்றுகிறார்.

***

இத்தகைய பேருதவி செய்து வரும் சமாஜத்தாருக்கு தனவந்தர்களனைவரும் பொருள் தானம் செய்தால் மிக்க சுகிருத மடைவார்கள். மைசூர் கவர்ண்மெண்டாரும் தினசரிச் செலவுக்கு திரவிய சஹாயம் செய்வதுடன் சீக்கிரத்தில் ஒரு இடமும், கட்டிடமும் கட்ட திரவியமும் கொடுத்துதவுவார்கள் என நம்புகிறோம்.

***

இதே மாதிரி மற்ற நகரங்களிலும் ஸ்திரீகள் சமாஜங்கள் ஏற்பட்டாலல்லவோ நம்முடைய ஸ்திரீகளும் நம்மாதிரு பூமிசேவையைக் கைக்கொள்ள இடமுண்டாகும்.

ஆர். ரங்கஸ்வாமி ஐயர்.

---

*மேற் கூறப்பட்ட சர்வ இந்தியா சங்கீத சபை வெகு விமர்சையாய் நடை பெற்றது. அநேகம் சாஸ்திர நிபுணர்களால் பத்திரிகைகளும், உபந்யாசங்களும் நிகழ்ந்தன. சங்கீதக் கச்சேரிகளும் நடந்தன.

427

## பத்திராசிரியர் பக்கம்.

---

நேயர்காள்! பூர்ணசந்திரோதயத்திற்கு இந்த சஞ்சிகையுடன் 6 வயது பூர்ணமாகிறது. இதுகாறும் நம்மாதிரு பூமிக்கு இது எவ்வளவு உழைத்திருக்கின்றதென்றும் பிரஹ்மக்ஞானத்தைப் பரவச் செய்வதில் எத்துணை உதவி புரிந்திருக்கின்றது என்றும் நீங்கள் நன்கு அறிவீர்கள். இப்பத்திரிகையின் வாயிலாகத் தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் தேர்ந்த வித்வான்கள் பலர் தங்களுடைய ஞானத்தைப் பலரும் அறியும்பொருட்டு அரிய பெரிய வியாசங்களை வெளியிட்டிருக்கிறார்கள். பதஞ்சலியோக சூத்திரங்கள், உதாசீன சாது ஸ்தோத்திரம் முதலிய உயர்ந்த ஸம்ஸ்கிருத நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டு பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் பிரஹ்மக்ஞானத்தலைவர்களால் ஆங்கிலத்தில் லோகோபகாரார்த்தம் வெளியிடப்பட்ட தத்வங்களும், புத்தகங்களும், உபந்யாசங்களும் தமிழறிவாளர்களுடைய பிரயோஜனத்துக்காகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளி வந்திருக்கின்றன. மேலும் சென்ற மூன்று வருஷங்களாக சஞ்சிகையின் முதலில் தற்கால நிலைமை யென்ற தலைப்பின்கீழ் இந்தியாவிலும் லோகத்திலும் நடக்கும் சம்பவங்களையும் அவைகளின் தத்வங்களையும்பற்றி பத்திராசிரியர் எழுதிவருகிறார். இதர மாதாந்தரப் பத்திரிகைகள்போல் நசுவரமானதும் சில காலத்துக்கு மட்டும் பிரயோஜனகரமான விஷயத்தைப் பற்றி மட்டும் நாடாமல், இந்த நமது பத்திரிகை எக்காலத்தும் அறிவாளர்களால் போற்றப்படும் விஷயங்களால் நிறைந்துள்ளது. இதுகாறும் நமது பத்திரிகையை ஆதரித்துவந்த உங்களுக்குப் யான் நன்றியறிதலைக் கூறுகிறேன்.

உத்தமர்கள் சேர்ந்து 7 அடிகள் நடந்தால் அவர்கள் நெருங்கிய மித்திரர்களாகிறார்கள் என்பது ஆன்றோர் வாக்

கியம். ஆகையால் இப்பத்திரிகையில் 7 பக்கமாவது படி த்த ஒவ்வொருவரும் இப்பத்திரிகையின் நண்பரல்லவா? பூர்ணசந்திரோதயத்தின் நன்மையையும் க்ஷேமத்தையும் கொள்ளவேண்டியது உங்கள் கடமையல்லவா? ஆகையால் நீங்கள் ஒவ்வொருவரும் இப்பத்திரிகைக்கு எவ்வாறு உதவி புரியலாம் என்று யோசித்து உங்களாலியன்ற உதவியைச் செய்யவேண்டுமென வேண்டுகிறேன். நண்பர்கள் ஒவ்வொரு வரும் மனது வைத்தால் ஒரு புதிய சந்தாதாரைச் சேர்த்து அனுப்புவது சிரமசாத்தியமன்று. அப்படிச் செய்தால் நமது பத்திரிகைக்கு எத்துணை பேருபகாரமாகும்? மே லும் இப்பத்திரிகையில் பிரசுரமாகும் விளம்பரங்களில் கண்ட சாமான்களுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையின் பெயரைக்கண்டு எழுதுவதும் ஒரு உபகாரமாகும்.

பத்திரிகைக்கு விஷயதானம் செய்யும் நேயர்கள் தெ ளிவாகவும், ஒரு பக்கத்தில் மட்டும் எழுதியும், அடிப்பு வரிப்பிளப்பு இல்லாத படியும் எழுதியனுப்பவேண்டும். பூர் ணசந்திரோதயத்தின் 6 பக்கங்களுக்கு மேற்படாதபடி ஒவ்வொரு விஷயமும் ஒரே சஞ்சிகையிலேயே முடியக்கூடி யதாய் வியாசங்கள் எழுதியனுப்பவேண்டும்.

பிரஹ்மஞான சபையில் முதல் சில வருஷங்களில் புத்தகங்களைப்படித்து அவைகளில் அறிஞர்களால் வெளியி டப்பட்ட சூக்ஷ்மலோக தத்துவங்களைத் தெரிந்து கொள்ளு வதே முக்கியமெனக் கொள்ளப்பட்டது. அப்பால் புத்தகங் களில் புதைந்துகிடக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளு வது மட்டும் போதாது, நமது குணத்தையும் சீலத்தையும் சீராக்கிக்கொள்ளுவதுதான் நாம் ஜன்ம மெடுத்ததற்குப் பயனென்று கருதப்பட்டது. தற்காலத்திலோ, மேற்கூறிய இரண்டு விதங்களிலும் அங்கத்தினர் பிறரிடமிருந்து தாங் கள் லாபமடைவது மட்டும் போதாது, தங்களாலியன்றவ ளவு பிறருக்கு மனோவாக்கு காயங்களாலும் திரவியத்தா

லும் உதவி செய்யவேண்டும். இதுவரை போல் சும்மா விராமல் அங்கத்தினர் எல்லோரும் சுறுசுறுப்புள்ளவர்களாக லோகோபகாரச் செய்கைகளைச் செய்யவேண்டுமென்று நம் தலைவர்களால் உபதேசிக்கப்படுகிறது. நமது சபைத் தலைவரவர்கள் 24 மணியில் 18மணிவரை நம் நாட்டின் க்ஷேமத்துக்காக உழைத்துவருவதும், பி. பி. வாடியாவி. ஜினராஜதாசரவர்களும் இன்னும் மற்றவர்களும் ஒய்வு ஒழிவின்றி நம் நாட்டின் உயர்வை நாடிக் கைங்கரியம் செய்து வருவதும் எல்லோரும் நன்கு அறிந்த விஷயம். ஆகையால் தமிழ்நாட்டிலும் பரோபகாரத்தின் பொருட்டு உழைத்துவரும் சங்கங்களுடைய விவரங்களைப்பற்றி நண்பர்கள் நமது பத்திரிகைக்கு எழுதுவார்களானால் மாதம் ஒவ்வொன்றுக்ப் பிரசுரம் செய்யப்படும். சத்காரியங்களில் ஒருவரையொருவர் முந்தவேண்டுமென்ற அவா ஏற்படுவது மிக்கநல்லதே. இம்மாதத்தில் அத்தகைய ஒரு கைங்கர்யம் புரியும் சபையைப்பற்றிச் சிறு குறிப்பு எழுதப்பட்டுளது ஒவ்வொரு சஞ்சிகையிலும் "கைங்கரியம்" என்னும் விஷயத்துக்காக இரண்டு பக்கங்கள் கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. நமது தமிழ்நாட்டில் நடைபெறும் கைங்கர்யங்களைப் பற்றி நேயர்கள் எழுதுவார்களாக.

---

## நன்மொழி.

---

எட்டி பழுத்த *இருங்கனி வீழ்ந்தன
†வொட்டிய நல்லறஞ் செய்யாதவர் செல்வம்
வட்டிகொண் டீட்டியே மண்ணின் முகந்திடும்
‡பட்டிப் §பதகர் பயனறி யாரே.—திருமந்திரம் 260.

---

* பெரியகனி. † பொருந்திய. ‡ வஞ்சனை. § பாதகர்.

430

## கைங்கரியம்.

### வித்யாதர்ம பரிபாலன சபை, மதுரை.

---

தானங்களில் சிறந்தது அன்னதானம். அதிலும் பன்மடங்கு சிறந்தது வித்யாதானம். அன்னதானத்தால் அப்போதியப் பசி தீரும். வித்யாதானத்தால் அறிவின்மை நீங்கும். பசி தீர்ந்தால் மறுபடியும் பசிக்கும். ஆனால் வித்யாதானத்தின் பிரயோஜநம் சாசுவதமானது. கண்ணிலாதானுக்கு கண் கொடுத்தல் போல் படிப்பில்லாதானுக்கு கல்வி கற்பிப்பது குன்றாத ஆனந்தத்தையும், புத்தியின் விகாசத்தையும், சிலத்தின மேன்மையையும், குணத்தின் சீர்மையையும் தரும். இது ஒருபெரும்ஆத்மலாபம். மேலும் படியாதவனுக்கு ஜீவனோபாயம் தேடுவது மிக்க துர்லபம். ஆகையால் படிப்பு கற்றுக்கொடுத்தால், அதிலும் தற்காலத்தில் ராஜபாஷையாகிய ஆங்கிலத்தைக்கற்பித்தால், ஒரு வாலிபனுக்கு ஜீவனோபாயம் தேடமுக்கிய சாதனம் கிடைக்கின்றது. அவனும் நல்ல பதவியடைந்து தன்னைச்சார்ந்த பலருக்கும் உதவி புரிய யோக்கியதை யடைகிறான். ஆகையால் ஒருவனுக்கு பசிக்கு அன்னமிடுவதால் எத்தனை சுகிர்தம் உண்டோ அதைவிட ஒருவனைத் தனக்கும் பிறர்க்கும்அன்னமிட யோக்கியதையடையும்படி செய்வதற்குஎத்தனை அதிகம் சுகிர்தம் உண்டென்பது சொல்லாமலே விளங்கும்.

அன்னதானமும் வித்யாதானமும் முக்கிய நோக்கங்களாயுள்ள மேற்கண்ட வித்யாதர்மபரிபாலன சபையானது 1910ஹு மேமீ 8உயன்று மதுரையில் ஸ்தாபிக்கப்பெற்றது. இப்பொழுது 6-ம் வருஷம் நடைபெறுகிறது. மதுரையிலுள்ள கலாசாலைகளில் கல்வி கற்கும் மாணாக்கர்களுக்குஉதவிச்சம்பளம் கொடுத்துவருவதுதான் இச்சபையின் முக்கிய நோக்கம். முதல் வருஷம் முதல் 5-ம் வருஷம் வரையில் 10, 20, 34, 69, 62 வாலிபர்களுக்கு உதவிச்

சம்பளம் கொடுத்துவந்திருக்கின்றது. 6-ம் வருஷத்தில் 61 மாணாக்கர்களுக்கு உதவிச்சம்பளம் கொடுத்துவருகின்றது. மாணாக்கர்கள் படிக்கும் பள்ளிக்கூடங்களின் தலைமை உபாத்தியாயர்களால் இச்சபையின் பேருதவியைப் பற்றி போற்றியெழுதப்பட்டுள்ளது. இக்காலத்தில் சர்க்காரில் பள்ளிக்கூடச் சம்பளத்தை மிகவும் உயர்த்திவிட்டார்கள். ஆகையால் ஏழையாயிருக்கும் மாணாக்கர்கள் வேறு உதவி இல்லாமல் பள்ளிக்கூடங்களில் படிப்பது அசாத்தியமாயிருக்கின்றது. ஆனால் அவர்களில் எத்தனை பெயர்கள் புத்திக் கூர்மையுள்ளவர்களாயும் உன்னத பதவிக்கு வரக்கூடியவர்களாயும் இருக்கிறார்கள். அத்தகைய ஏழைகளாயும் புத்திசாலிகளாயும் இருக்கிற மாணாக்கர்களுக்கு உதவி புரிவதே இச்சபையின் கடமை. ஏழமை, புத்திசாலித்தனம் என்ற இரண்டும் உடையவர்கள் தான் உதவிச்சம்பளம் பெறுதற்கு உரியவர்கள். உதவி செய்த பையன்களில் பெரும்பான்மையோர் பரீக்ஷைகளில் தேறியிருக்கின்றார்கள். இச்சபையின் கணக்குகளை வருஷா வருஷம் தக்க மனுஷர்களைக்கொண்டு தணிக்கை செய்துவரப்படுகின்றது. இச்சபையின் நிர்வாக சபையில் மதுரையிலிருக்கும் முக்கிய கனதனவான்கள் அங்கத்தினர்களாயிருக்கிறார்கள். உபகாரச் சமபள வகையில் முதல் வருஷம் முதல் 5-ம் வருஷம் வரையில் ரூ. 137—8—0, 460-15-0 753-9-0, 783-4-0, 822-12-0 செலவு செய்துவரப்பட்டது.

## ஸ்ரீ மான் கோகலே ஞாபக உதவிச் சம்பள மூலதனம்

இதுகாறும் ஒரு வருஷத்தின் கடைசியில் எவ்வளவு ரூபாய் மிகுதி யிருந்ததோ அது அடுத்த வருஷச் செலவுக்கு உபயோகப்படுத்திவரப்பட்டது. ஆனால் ஒரு மூலதனம் ஏற்படுத்தினால் சிலாக்கியம் என்று கருதப்படுகின்றது. குறைந்தபக்ஷம் ரூ. 2,000 மூலதனமாக தற்போது ஏற்படுத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதை ஐக்கிய சங்கங்களில் வட்டிக்கு கொடுத்து அதன் வரும்படியிலிருந்து சில மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்

பளம் கொடுப்பதாக உத்தேசம். இந்த மூலதனத்துக்கு கோகலே ஞாபக உபகாரச்சம்பள மூலதனம் என்று கூறப்பட்டது என்னேயோவெனில், ஸ்ரீமான் கோகலேயென்பார் அவர்கால முழுவதும் வித்யையைப் பரவச்செய்யும் வண்ணம் மிகுந்த சிரத்தை யெடுத்தார். வெகுகாலம் அவர் பள்ளிக்கூட உபாத்தியாயராக இருந்தார். அப்பால் இந்தியா சட்ட நிருபண சபையில் அங்கத்தினராயமர்ந்த போது இந்தியாவில் எல்லாப் பையன்களும் சம்பளமில்லாமல் படிக்கும்படி கட்டாயப்படுத்தவேண்டும் என்று சட்டம் ஏற்படுத்த முயன்றார். அது கூடவில்லையாயினும், அந்தப்பெருமுயற்சி வித்யா விஷயத்தில் சர்க்காரால் அதிக உதவி புரிவதற்கும் இந்தியர்கள் அதிக சிரத்தை யெடுப்பதற்கும் காரணமாயிற்று. அந்த மகானுடைய உற்சாகமும், விடா முயற்சியும், சாந்தமும், மனோதைரியமும், தேசாபிமானமும், பிறர் நலம் நாடும் தகைமையும், எல்லோராலும் மெச்சப்பட்டது. அவர் பெயர் பூண்ட எக்கைங்கரியமும் சோர்வுபடாது என்று இப்பெயர் கொடுக்கப்பட்டது. 25ரூ, 15ரூ, 10ரூ, 5ரூ, 1ரூக்கு குறையாமல் நன்கொடையாகக் கொடுப்பவர்கள் முறையே எ-பி-சி-டி-யி கிளாஸ் கொடையாளிகளாகக் கொள்ளப்படுவார்கள். இத்தகை வசூலான பிறகு ஒரு புத்தகமாக எல்லாருடைய பெயர்களும் அவர்கள் கொடுத்த தொகைகளும் வெளியிடப்படும்: எல்லோரும் இந்தப்பெரும் கைங்கரியம் செய்ய இயலும் பொருட்டு 5-வகுப்புகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. இம்முயற்சி கைகூடும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஆர். ரெங்கசாமி ஐயர்,

வக்கீல் கௌரவ காரியதரிசி,

வித்தியா தர்ம பரிபாலன ஸபை, மதுரை.

குறிப்பு:—நன்கொடையளிப்பவர் மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்பலாம். தொகைக்கு வந்தனமும் ரசீதும அனுப்பப்படும்

# மீராபாய்.

## அங்கம் 2. களம் 3.

(392-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

காலம்—மத்தியானம். இடம்—கும்பாஜி ராணாவினரண்மனையிலோரறை. நாடக பாத்திரர்கள்—சுந்தரீ.

---

சுந்—(தனக்குள்) இந்த அந்தப்புரத்திலிருக்கும் சேடிகளில் ஒருவளாவதென்னிடத்தில் அந்தரங்க விசுவாசம் வைத்திருக்கவில்லையே. நமது காரியம் கைகூடும் பொருட்டு உபயோகப்படுத்திக்கொள்ள ஒருவள் கூடக் கிடைக்கவில்லையே. மீராபாய் கட்டளையிட்டால் அக்கட்டளையை நிறைவேற்ற எல்லோரும் போட்டி போட்டுக்கொண்டு யத்தனிக்கிறார்கள். நான் ஏதாவதேவினாலென்னுடைய சேடிகூட அதை அரைமனதோடு செய்கிறாள். எல்லாச் சேவகர்களும் அந்த மீரா எப்போது தங்களுக்குக் கட்டளையிடப்போகிறாள், அவளுக்கு பணிவிடை செய்யத் தங்களுக்கெப்போது சந்தர்ப்பம் கிடைக்குமென்றெதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நானேதற்காவதொரு சேவகனை வேண்டினாலவனைத் தேடிப்பிடிக்க வேண்டியிருக்கிறது. அதிருக்கட்டும், இந்த அந்தப்புரத்திலிருக்கும் மற்ற ஸபத்னீகளுக்கென்னைவிட மீராபாயெப்படி அதிகமாய் விட்டாள்? என்னைக் காட்டிலும் அதிக காலமிவர்களோடு பழகிவந்தாளா? அல்லதுபேசி சந்தோஷப்படுத்துவதில் சாமர்த்தியமென்னைவிட இவளுக்கதிகமுண்டா? எல்லோருமவளிடத்தில் பிரியங்கொண்டு அவளுடைய சகவாசத்தைக் கோருகிறார்களேயல்லாமலென்னிடத்தில் பேசிக்கொண்டிருக்க யாராவது பிரியப்படுகிறார்களா? இந்த மீராவுக்கிவ்வளவு செல்வாக்கா? இன்னும் எவ்வளவு காலமிந்த செருக்கிருக்கிறதென்று பார்ப்போம்?

உன் காலம் கிட்டிவிட்டது மீரா! நான் சுந்தரியென்பது ஞாபகமிருக்கட்டும். சுந்தரிக்கெதிராக நின்றவர்களிது வரையிலவளுடைய வலையிலகப்படாமல் தப்பினதில்லை. இந்த மீராவா தப்ப முடியும்! கட்டாயமகப்பட்டுக் கொண்டாளவள். இன்னும் சில தினங்களுக்குள் இந்த மீராவிருக்கும் ஸ்திதியைப் பார்க்கிறேன். ஏற்கனவே ராணு என் போதனைக்குட்பட்டிருக்கிறார். அவரைக்கொண்டு எண்ணத்தை நிறைவேற்றுகிறேன்பார். நான் வாயைத் திறந்து சொல்லவேண்டியது தான் தாமஸம். ராணு அப்படியே செய்வாரென்பதிற் சந்தேகமில்லை (திரைக்குள் சப்தம்)

நீலா—(சேடி வருகிறாள்) என்னடி. சப்தமங்கே ?

நீலா—அம்மா, நமது மீராபாயம்மாளுக் கேதோ கஷ்டகாலம் வந்துவிட்டது. காரணமில்லாமலவர்கள் மீது நமது ராணுவுக்குக் கடுங்கோபம் வந்திருக்கிறது.

சுந்—என்னடி. சமாசாரம்?

நீலா—நாலைந்து தினங்களுக்குமுன் ராணியம்மாள் கிருஷ்ணாலயத்திலிருந்து திரும்பி வரும்போதொரு சந்நியாசியால்—

சுந்—ஆமாம், மீராபாய் அம்மகாகண்டிகையை விக்ரஹத்தின் கழுத்தில் போட்டவரைக்கு மெனக்குத் தெரியும். பிறகு?

நீலா—அது நமதரசருக்குத் தெரிய வந்தது. அதையவர் தன் சபைக்கெடுத்துவரச் சொல்லி அதைப்பற்றி விசாரிக்கையிலது ஒரு சக்ரவர்த்தியினுடையதென்றறிந்து அதன் நிமித்தம் நமதன்னையிடத்திலேதோ கெட்ட அபிப்பிராயம் கொண்டு சபையைக் கலைத்துவிட்டு அதிகோபத்துடன் அரண்மனைக்குட் சென்றார். அதைக் குறித்துத்

தான் நாங்களெல்லோரும் மனம்பொறுக்கமாட்டாமல் விசனிக்கலானோம். அதோ மஹாராஜாவே வருகிறார்.

சுந்—நீ போ. (நீலா போகிறாள்) நான் நினைத்த காரியம் கைகூடிவிட்டது. என் சபதம் நிறைவேறிற்று. இனி எனக்கு விசாரமில்லை. இதோ மஹாராஜா வந்து விட்டார்.

(கும்பாஜி வருகிறார். அங்கிருக்குமொரு சோபாவின்மீது சாய்கிறார்.)

இதென்ன நாதா? என்ன சமாசாரம்? உங்களைப் பார்த்தாலென்னவோ மாதிரியிருக்கிறதே. இப்படியொரு நாளும் தாங்களிருந்ததில்லையே.

கும்—சுந்தரீ! சுந்தரீ!

சுந்—என்ன சமாசாரம், நாதா? நிதானித்துக்கொள்ளுங்கள். சற்றே பிறகு பேசலாம்.

கும்—சுந்தரீ! இந்த மீரா இப்படிப்பட்டவளென்று நான் நினைக்கவில்லையே.

சுந்—இதென்ன, நாதா? எனக்கொன்றும் தெரியவில்லையே. என்ன சமாசாரம்?

கும்—இந்தப் பாபி யிப்படி குலத்தைக் கெடுப்பாளென்று நான் நினைத்ததேயில்லையே.

சுந்—நாதா, தாங்கள் நிதானித்துக்கொண்டெனக்கு விஷயம் தெரியும்படி சொல்லுங்கள்.

கும்—இப்போது தானுண்மை வெளியாகிறது. அப்பொழுதே தனக்கு விவாகம் செய்து கொள்ள இஷ்டமில்லாததாகச் சொன்னாளல்லவா? சரிதான், அதற்குக் காரணமிப்போதல்லவோ தெரியவருகிறது.

சுந்—நாதா, எனக்கொன்றும் புரியவில்லையே. சமர் சாரத்தைக் கோவையாய்ச் சொல்லுங்கள்.

கும்—சுந்தரீ, இந்த மீரா செய்த காரியத்தைக் கேட்டாயா? உள்ளுக்கும் வெளிக்குமிவ்வளவு வித்யாசமிருப்பதை யிந்த மீராவிடத்தில் தான் கண்டேன். இவள் பக்தி பண்ணுகிருளாம். பாதிவ்ரத்யத்தை விட்டவளுக்கு பக்தி யெதற்கு?

சுந்—என்ன! மீராவா? ஒரு நாளுமிராதே.

கும்—உனக்கென்ன தெரியும்? நடந்ததைக் கேள்.

சுந்—என்ன, சொல்லுங்கள்.

கும்—இவள் கிருஷ்ணாலயத்துக்குப் போவதெல்லாம் வீண் வேஷந்தான். நாலைந்து தினங்களுக்கு முன் நடந்த சமாசாரமுனக்குத் தெரியாது. யாரோ ஸாது வேடம் பூண்ட ஒருவனொரு மகாகண்டிகையை இவளுக்குக்கொடுத்தாளும்.

சுந்—அதை மீரா வாங்கினளோ?

கும்—வாங்கி கிருஷ்ண விக்ரஹத்துக் கர்ப்பணம் செய்தாளாம்.

சுந்—அதற்கப்புறம்?

கும்—அப்புறமென்ன? பக்தையின் வேஷம் போட்டு பாதிவ்ரத்யத்தைக் குலைத்துக் கொள்ளுகிருள்.

சுந்—மீரா அப்படிச் செய்பவளில்லையே.

கும்—சுந்தரீ, நடந்த சமாசாரத்தை முழுவதும் கேள். எனக்கந்த சங்கதி தெரிய வந்தவுடன் அவ்வாபரணத்தை நானெடுத்து வரச்சொல்லி நமது நகரத்திலிருக்கும் வியா

ப்ரிகளை வரவழைத்து அதனுடைய விலையைப் பரிசோதிக்கச் சொன்னதின்மேலொரு வியாபாரி தானந்த மகரகண்டிகையை ஒரு சக்கிரவர்த்திக்கு முப்பதினுயிரம் வராகனுக்கு விற்றிருப்பதாகவும் ஆனலச் சக்ரவர்த்தி யாரென்று வெளியிடாதிருக்க வாக்குத்தத்தம் செய்திருக்கிறதாகவும் சொன்னுன். எவ்வளவோ விதங்களிலதட்டியும் பயமுறுத்தியுமச்சக்கிரவர்த்தியின் பெயரை அவ்வியாபாரி ஒரே பிடிவாதமாய்ச் சொல்லமாட்டேனென்முன். அதனுலென்ன தெரியவருகிறது? ஒரு சக்கிரவர்த்தியினுடைய விலையுயர்ந்த மகரகண்டிகை மீராவின் கைக்கு வந்திருக்கிறது. இந்த வியாபாரி மீராவின் கெட்ட நடத்தையை ஒளிப்பதற்காக சக்கிரவர்த்தியின் பெயரை மறைக்கிறன்.

சுந்—(தனக்குள்) என் வலையிற் சிக்கி இப்படியறிவையுமிழக்கவேண்டுமா? வேண்டாத பத்னி கை பட்டாற் குற்றம் கால் பட்டாற் குற்றமென்பது சரியாகத்தானிருக்கிறது. சுந்தரியின் வேலையல்லவாவிது! (வெளிப்படையாக) நாதா இது மிகவுமாச்சரியமாய் அல்லவா இருக்கிறது. மீராபாயிப்படிச் செய்வதென்றல். அதென்னவோ? அதையெல்லாம் மறந்துவிடும் நாதா. தவறுவதெல்லோருக்கும் சகஜம்தானே தாங்கள் தயைகூர்ந்து மீராவை மன்னிக்கக்கூடாதா?

கும்—சுந்தரீ, நீயென்ன பிதற்றுகிருய். இந்தக் குற்றத்தை மன்னிக்சமுடியுமா? ஒரு ஸ்திரீயினிடமெந்த துர்க்குண மிருந்தாலு மிருக்கலாம், இந்தக் குற்ற மிருக்கலாமா? இதை நான் பொறுக்கமாட்டேன். இனியொரு க்ஷணமேனுமிந்த மீரா இவ்வரண்மனையில் தாமவசிக்கக்கூடாது. இனியவள் முகத்திலொருக்காலும் விழியேன்

எனக்கு துரோகம் நினைத்த இப்பாவி யிருந்தாலென்ன, இறந்தாலென்ன?

சுந்—நாதா, சகல ஜனங்களையும் காப்பாற்றியருள வேண்டிய தாங்களிப்படிக் கோபங்கொள்ளலாமா? என் நிமித்தமாவது மீராவை மன்னிக்கவேண்டும். அவள் செய்த குற்றம் பெரிது தான். நான் அதை மறுக்கவில்லை. ஆனாலும் தாங்கள் பெரிய மனது கொண்டவனோ மன்னிக்கக் கூடாதா?

கும்—சுந்தரீ, நீ சொல்லுகிறதென்ன தென்றுனக்கே தெரியாமல் பிதற்றுகிறாய். இனி வாயை மூடு. இம்மாதிரி பேசாதே—யாரங்கே?

(சேடி வருகிறாள்) அந்த மீராவிடம் சென்று இவ்வரண்மனையினின்றும் வெளியே செல்லும்படி. நானவளுக்குத்திரவு கொடுத்திருக்கிறதாகச் சொல். ஒருக்ஷணங்கூட தாமதிக்காமலுடனே புறப்பட்டேக வேண்டுமென்று சீக்கிரம் போய்ச் சொல் (சேடி போகிறாள்)

சுந்—நாதா இங்கு சற்று உட்கார்ந்து சிரம பரிஹாரம் செய்துகொள்ளுங்கள். கோபத்தைத் தணித்துக் கொள்ளுங்கள், தங்கள் முகத்தைப் பார்க்க முடியவில்லையே.

(திரை விழுகிறது.)

(காட்சி முடிகிறது)

(இன்னும் வரும்)

P. ஸ்ரீநிவாஸ ஐயர் M. A

439

# சமாசாரம்.

---

நாகர் கோவிலில் 1916ஆ பிப்பிரவரிமீ 19, 20ம் தேதிகளில் இரண்டாவது திருவாங்கூர் இலாகா பிரஹ்மக்ஞான கான்பரன்ஸ் நடைபெற்றது. நமது பிரஹ்மக்ஞான சகோதரர் ஸ்ரீமான் ஜினராஜதாசர் அக்கிராசனம் வகித்தார். திருவாங்கூர் எல்லையில் ஆர்வாமொழியிலேயே அநேகர் அக்கிராசனதிபதியை எதிர்கொண்டு வரவேற்று, அலங்கரிக்கப்பட்ட மோட்டார் வண்டியில் ஏற்றி நாகர் கோவில் வந்து அவர்களுக்கென்று திட்டம்செய்யப்பட்ட பங்களாவில் இறங்கினார்கள். 19ம்தேதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு கான்பிரன்ஸ் துவங்கிற்று. கடவுள் வாழ்த்து நிகழ்ந்த பின்னர் பிரஹ்மஸ்ரீ கல்யாணராம ஐயரவர்கள் அக்கிராசனபதியவர்கட்கும் மற்றவர்கட்கும் நல்வரவு கூறினார்கள். பிறகு அக்கிராசனதிபதியவர்கள் ஆங்கிலத்தில் "பரனைப் பிரிந்து தேடல்" என்னும் விஷயத்தைப்பற்றி சபையோர் மனதை கவரும்படி இனிது பேசிமுடித்தார். மறுநாள் காலை 7 மணிக்கு ஈ. எஸ். மீட்டிங்கு நிகழ்ந்தது. 8 மணிக்கு அக்கிராசனபதியவர்கள் "லோக குருவின் அவதார"த்தைப்பற்றிச் செய்த உபந்யாசத்தில் சென்ற 100 வருஷங்களாக லோகத்தில் நடைபெற்ற சம்பவங்களனைத்தும் இனி வரப்போகும் அவதாரத்துக்கு சூசனையாக இருந்தனவென்றும் இனி லோககுரு தோன்றுவது மிக்க அவசியமாயிருக்கிறதென்றும், வருவது நிச்சயமென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கினார். பிறகு "பிரஹ்மக்ஞான சபையும் பிரஹ்மக்ஞானமும்" என்ற விஷயத்தை மலையாளத்திலும் ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் 'லோககுருவருதலைப்'பற்றி தமிழிலும் உபந்யசித்தார்கள்.

மத்தியானம் 1 மணிக்கு நடைபெற்ற காரியாலோசனை கூட்டத்தில் கல்யாணராம ஐயரவர்களையும் ஸ்ரீநிவாச ஐயரவர்களையும் முறையே கான்பிரன்சுக்கு அக்கிராசனபதியாகவும் காரியதரிசியா

கவும் நியமித்தார்கள். இவர்களும், ஆ. ஆனந்தராவ், என். ராமன் பிள்ளை, என். மாதவன்பிள்ளை, சி. ராமன் தம்பி, எஸ். வெங்கடராமநாயுடு, கே. பரமேசுவர ஐயர், எ. எம். குமாரபிள்ளை, கே. ராஜகோபாலஐயர் ஆகிய பதின்மரும் நிர்வாக கமிட்டியாய் நியமிக்கப்பட்டார்கள். 2 மணிக்கு சபையோர்கள் பிரச்னங்கள் கேட்க அக்கிராசனபதியவர்கள் தகுந்த உத்தரமளித்தார்கள் பின்னர், பி. எஸ். சதாசிவ ஐயர் "ராமாயண விமர்ச"த்தைப்பற்றி ஒரு பத்திரிகையும் எஸ். கிருஷ்ணசாமி ஐயர் "மஹா பாரதத்தின் கூடார்த்த"த்தைப் பற்றி தமிழில் ஒரு பத்திரிகையும் வாசித்தார்கள் நெல்லியப்ப பிள்ளையவர்கள் "கர்ம"த்தைப்பற்றி தமிழில் ஒரு உபந்யாசமும் கல்யாணராமஐயரவர்கள் "பிரஹ்மக்ஞானசபை யங்கத்தார் செய்யவேண்டிய கைங்கர்ய"த்தைப்பற்றி தமிழில் ஒரு உபந்யாசமும் செய்தார்கள். இதன் பின்னர் ஸ்ரீமான் ஜீனராஜதாசருடைய முடிவுரை கூறப்பட்டது. அதனால் சபையோரனைவரும் உற்சாகப்படுத்தப்பட்டு மிக்க பயன் பெற்றார்கள். பிரஹ்மக்ஞான சபையை 16 பேர்களும் உதய நக்ஷத்திர சங்கத்தை 4 பேர்களும் சேர்ந்தார்கள்.

அன்றிரவு 9 மணிக்கு ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் "லயனல்ஸ் வோர்டேப்ரைஸ் என்ற ஒருவர் ராமனை தர்சித்தார்" என்ற கதையை ஹரிகதா காலக்ஷேபரூபமாக நிரூபித்தார். அதை ஞானஸ்ரீ ஜீனராஜதாசர் செவியுற்று ஸ்ரீநிவாசஐயரை ஆசீர்வதித்து ஆரமிட்டார். இவ்வாறு கான்பெரன்ஸ் நடைபெற்றது.

நாகர் கோவிலில் நடைபெற்ற இந்த மஹாசங்கத்தின் பிரபாவத்தினால் மென்மேலும் அந்நகரிலும் அதைச்சூழ்ந்தஇடங்களிலும் பிரஹ்மக்ஞான சபையின் ஊக்கமும் சத்கர்மங்களும்விருத்தியடையும் என்பதில் சந்தேகமில்லை.

---

ஜிஞ்ஜிதாலூகா ஆலம்பூண்டி ஸ்ரீகணேசலாட்ஜு பிரஹ்மக் ஞானசங்கத்தின் மூன்ருவது வருஷ கொண்டாட்டமானது 9-3-16ல் அடியில் கண்டபடி நடைபெற்றது.

காலை 7 மணிமுதல் 8 மணிவரையில் கணேச பூஜையும் தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் குரு ஸ்தோத்திரம் முதலியன.

8முதல் 9வரையில் பஜனை.

12மணிக்கு சுமார் 100 ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது.

2 மணிமுதல் 5 மணிவரையில் பிரஹ்மக்ஞான சங்கத்தின் வரலாற்றைப்பற்றியும் பக்திஎன்ற விஷயத்தைப்பற்றியும் உபந்யாஸம் நடந்தது.

5 மணிக்கு பாடசாலை மாணவர்களுக்கு தின்பண்ட மளிக்கப்பட்டது. சந்தன புஷ்ப தாம்பூலாதிகளுடன் சபை பூர்த்தி.

சென்றவருஷத்தில் சபையில் நடைபெற்ற விஷயங்கள் அடியில் கண்டபடி:—

1. ஸ்ரீமத் பாகவதம் 4வது ஸ்கந்தம்முதல் 5வது ஸ்கந்தம் 16வது அத்தியாயம் வரையில் வாசிக்கப்பட்டது.

2. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் உபதேசரத்தின மாலை

3. இந்துமத தூஷணையின் பரிகாரம்.

4. ஸர்வசமய ஐகமத்ய சாரசங்கிரகம்.

5. ஸனாதன தர்மம்(சேஷய்யர் காரியதரிசி.)

பெரியதுளம்:-நிகழும்1916வருமார்ச்சுமீ 6வ யன்று பிரஹ்மஸ்ரீ டி. ராமசந்திரராவ் அவர்கள் (ரிடையர்ட் ஸப்ஜட்ஜ்) இவ்வூ

ருக்கு விஜயம் செய்தார்கள். 8-ம் தேதிவரை இருந்து சில உபந்யாஸங்கள் செய்து சென்றார். அவற்றுள் "பிரஹ்மக்ஞானமும் இந்துமதமும்" என்பதைப்பற்றிய உபந்யாசம் மிகுந்த ஊக்கமூட்டியது. புதிதாக ஐந்து அங்கத்தினர்கள் சேர்ந்தார்கள். இதில் ஏற்கனவே 15 அங்கத்தினர் உளர். ஐந்து பேர்கள் ஈ. யஸ். வகுப்பைச் சேர்ந்தவர்கள். உதயதிசை நக்ஷத்திர சங்கத்தில் 10 மெம்பர்களிருக்கிறார்கள். "நக்ஷத்ர தூதர்களின் சங்கமும்" சிறுவர்களுக்காக நடைபெற்று வருகின்றது. இச்சபை அங்கத்தினர்களாலேயே "ஹிந்து வாலிபர்களின் சங்க"மொன்று ஏற்பட்டு, வைதிக பாடங்கள் காலையிலும் சாயங்காலத்திலும் பிரதிதினமும் நடைபெறுகின்றன. இவர்கள் முயற்சியால் 100 பெண்கள் படிக்கும் ஓர் பெண்பாடசாலையும் நடைபெறுகின்றது. இப்பாடசாலையில் ஒன்று தமிழ்வகுப்பும் இன்னொன்று ஸம்ஸ்க்ருத வகுப்புமேயாகும். இக்கிளைச்சங்கம் மென்மேலும் மஹான்களின் அநுக்ரஹம் பெற்று பரோபகாரத்தில் சிறந்து உழைக்குமென நம்புகிறோம்.

கடம்பூர் நாடார் சங்கம்:—திருநெல்வேலிஜில்லா கடம்பூர் நாடார் சங்கத்தின் 4-வது ஆண்டு நிறைவு விழா நாளிது மார்ச்சுமீ 4, 5உகளில் வெகு விமரிசையாய்க் கொண்டாடப் பெற்றது. முதல் நாள் சென்னை ரேஞ்சு பிரஹ்மக்ஞான சபை இன்ஸ்பெக்டர் பிரஹ்மஸ்ரீ P. R. சுந்தரராஜ ஐயரவர்களும், இரண்டாவது தினம் காலையில் மதுரை ஹைக்கோர்ட் வக்கீலும், "பூர்ணசந்திரோதயம்" பத்திராதிபருமான பிரஹ்மஸ்ரீ அ. ரெங்கஸ்வாமி ஐயரவர்களும், மாலையில் மதுரை பிரஹ்மக்ஞான சபை காரியதரிசியும், ஹைக்கோர்ட்டு வக்கீலுமான பிரஹ்மஸ்ரீ கல்கத்தா இராமச்சந்திர ஐயரவர்களும் அக்கிராசனம் வகித்தார்கள். அன்றியும், அவ்வமயம், இவ்வூர் நற்கதியெய்தி முன்னேற்றம் அடையுமாறு, பிரஹ்மக்ஞான சபை சென்னை மாகாணக் காரியதரிசியும் மாஜி சப்ஜட்ஜுமான பிரஹ்மஸ்ரீ டி. ராமச்சந்திர ராவ் அவர்களும், அவர்க

ளது இன்னுயிர்த் துணைவியரும் ஈண்டு ஒரு தினம் முன்ன தாகவே விஜயஞ் செய்தனர். இச்சபைக்குச் சுற்று ஊர்களிலிருந் தும், திருநெல்வேலி, தூத்துக்குடி, மணியாச்சி, ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுபட்டி, அறுப்புக்கோட்டை, மதுரை முதலியவிடங்களிலி ருந்தும், பிரஹ்மக்ஞான சபை அங்கத்தினர் பலரும், நாடார் ஜனங்கள் பலரும், அபிமானிகளான உத்தியோகஸ்தர் பலரும் வந்தெய்தினர். முதல் தினம் சச்சிதானந்தம்" "இல்லறம்" "பெண் கல்வி" "மனிததசரீரம் வந்தகாரணம்" "வாய்மை" கல்வி? என்னும் விஷயங்களைப் பற்றி உபந்நியாசங்கள் நிகழ்ந்தன. அன்று பிரசங்கித்தவர்களில் மூவர் நாடார் அறிஞர்கள். பிறகு "தனுர் பங் கம்?" என்னும் விஷயத்தைப் பற்றி நாமக்கல் கம்பராமாயணப் புல வர் பிரஹ்மஸ்ரீயும். கோவிந்தராஜ ஐயங்காரவர்களும், "ஐரோப்பிய யுத்தம்" என்பதைப் பற்றி சபாநாயகரவர்களும் உபந்நியாசங்கள் செய்தார்கள். சபாநாயகர் நேச தேசங்களுக்கே வெற்றி முடிவிற் கிடைக்குமென்றும், அவ்விதம் நாம் தினந்தோறும் தியானஞ்செய்ய வேண்டுமென்றும் நாம் நமது இராஜாங்கத்திற்கு எவ்வழியாலும் உதவி புரியவேண்டுமென்றும் உறுதியாய் உரைத்தனர்.

மார்ச்சுமீ 5௳ காலையில் சபையின் காரியதரிசிகளில் ஒருவ ராகிய பிரஹ்மஸ்ரீ ஆர். பஞ்சாபகேசஐயர், துவக்க முதல் அதுவரை சங்கம் எவ்வாறு விருத்தியாய் வந்திருக்கின்ற தென்பதைக்கூறி, தற்காலம் அச்சபையில் 58 அங்கத்தினர் இருப்பதாயும், அதைச் சார்ந்து பள்ளிக்கூடம் ஒன்றிருப்பதாயும் அதற்கு 6 ஏகர் நிலம் பிரத்தியேகமாய் கட்டிடம் கட்டுவதற்கு அக்கலாசாலையின் மானே ஜரான மகா-௱-௱-ஸ்ரீ க. அ. ரு. ம. மகாலிங்க நாடாரவர்க

ளால் வாங்கப்பட் டிருப்பதாயும் அறிக்கைப் பத்திர மூலமாய்த் தெரிவித்தனர்.

அதன் பிறகு, பிரஹ்மஸ்ரீ டி. ராமசந்திரராயர் அவர்கள் கேட்டோர் மனம் கரைந்துருகுமாறு "புருஷார்த்தம்" என்னும் விஷயத்தைப்பற்றி உயர்ந்ததோர் உபந்யாசஞ்செய்தருளினர். ஏனைய உபந்யாசங்கள் "சாந்தம்" "கல்வி பயில உதவியளித்தல்" நமது தற்காலத்திய கடமை" என்பவைகளே. அக்கிராசனாதிபதியவர்கள் நாம் நமது பழைய குறைகளையும் அசூயைகளையும் நீக்கி, எவ்வுயிரிடத்தும் அன்பு பாராட்டி பிறர்க்குழைத்தலால் கடவுளை வழிபாடுசெய்யுமாறு வற்புறுத்தினர். அன்றுமாலை "ராமதர்மம்" "துறந்தோர்பெருமை" என்றஇரண்டு அரியஉபந்யாசங்கள் அப்பொழுது நிகழ்ந்தன. பிறகுசபாநாயகர்இக்காலத்தின்பெருமையைக் குறித்தும் நாம் கொள்ளவேண்டிய மனோ நிலைமையைக் குறித்தும் கூறி சங்கத்தை ஆசீர்வதித்தனர். பிரஹ்மஸ்ரீடி. ராமசந்திரராவ் அவர்களால், கலாசாலை மாணவர்களில் மூவருக்கு நற்சீலம் பரோபகாரம் இவை சென்றஆண்டுமுழுதும்பயின் றதின்பலனாய் மூன்று பரிசுகள் அளிக்கப்பட்டன. அன்று மாலை பந்தலில் புகைப்படம் ஒன்று சபையின் முக்கியமான அங்கத்தினர்களையும் அபிமானிகளையும் வைத்து எடுக்கப்பட்டது. முடிவில் கிங் ஜார்ஜ் எலிமெண்டரி ஸ்கூல் பிள்ளைகள் இருவரால் "ராஜவாழ்த்தும்" பாடப்பெற்றது.

இவ்வருடக் கொண்டாட்டத்தைக் கண்ணுற்ற பொருட்டுபல ஊர்களிலிருந்தும் கூடிய ஜனங்களின் சங்கியை 500-க்கு மேற்பட்டிருக்கும். இக்கூட்டம் இக்கிராமத்திற்கு மிகப் பெரிதேயெனக் கூறவேண்டும். "உயர்" வகுப்பார் சிலர் வந்தருளியது நம்மனோர் முன்னேற்றத்துக்கு அறிகுறியாயும் சங்கத்தின் உற்சாகத்துக்கு ஏதுவாயுமிருந்தது.

கும்பகோணம்.—இவ்வூர் முனிசிபல் கவுன்சில் ஏற்படுத்திய ஓர் பெண்பாடசாலை, 1908ஷு பிரஹ்மக்ஞான இளைச்சங்கத்தாரின் மேல் பார்வைக்குள், ஒப்புவிக்கப்பட்டது. அதையவர்கள் நமது பிரஹ்மக்ஞான சங்கத்தைச்சேர்ந்த வித்யாபிவிருத்தி இலாகாவின் கீழ் நடைபெறுமாறு 1913-ஷுத்தில் ஒப்புவித்தார்கள். உடனே நமது அன்னை, வஸந்தம்மையார் ரூ 5000 நன்கொடையளித்தார்கள். ரூ 17,100 செலவாகக்கூடிய கட்டிடத்திற்கு ஏற்பாடாயிருக்கிறது. ஸர்க்காரில் ரூ 8550 நன்கொடை யளிப்பதற்குச் சம்மதித்திருக்கிறார்கள். மீதி ரூ 3550 இதற்குத் தேவை. நம் பத்திரிகையைப் படிக்கும் கனவான்கள் பலர் இவ்விஷயத்திற்குத் தம் மாலியன்ற வளவில் உபகரித்து வரலாம். மிஸ். பார்ஸன்ஸ், மிஸ் காட் என்ற இரண்டு ஆங்கில ஸ்திரீரத்தினங்கள் நம் நாட்டின் பிராசீன தர்மங்களுக்கு விசேஷ கௌரவமுடையவர்களானமையால், அவ்வாஜமான பரோபகாரத்தையே கருத்திற் கொண்டு அப்பள்ளிக் கூடத்தைச் சிறப்பாய் நடத்தி வருகிறார்கள். சென்ற மீ 12-டயில் இதற்கு அன்னை வஸந்தம்மையார், தமது அபய வரத ஹஸ்தங்களால் ஆசீர்வதித்து மூலசிலாஸ்தாபனம் செய்தார்கள். அன்று 3-30 மணிக்கு அவ்வூர் ஸ்திரீகளுக்கோர் சிறு உபந்யாஸமும் செய்தார்கள். அதில் கூறிய சில முக்கிய விஷயங்கள் பின் வருமாறு:—

முற்காலத்து இந்திய மாதர்கள் நன்கு கற்றவர்களாயிருந்தனரென்றும், பிரஹ்மக் ஞானிகளாகவும் கூட விருந்தனரென்றும் நேற்று வரையிற் கூட, புராணக் கதைகளெல்லாம் தெரிந்த பாட்டிகள் நம் வீடுகளில் பலர் இருந்திருக்கிறார்களென்றும், அப்படியே, சாமாந்யமான வியாதிகளுக்கு நல்ல சிகிச்சை முறைகளையறிந்த கிழவிகள் எத்துணையோ பேர்கள், இப்போதும் இருக்கின்றனரென்றும் எடுத்துச் சொன்னார். பிறகு, மத விஷயங்களிற் கல்வியும், கிருஹ கிருத்யங்களைச் செம்மையாய் நடத்தும் திறமையும், சரீர உறுப்புகளில், திடீரென்று நேரும் அபாயங்களாலான கோளாறுகளை அதிகரிக்க விடாவண்ணம் செய்யவேண்டிய முதல் முறைகளைப்பற்றிய அறிவும் இக்காலத்தில் இந்தியஸ்திரீகளுக்கு அவசியம் என்றும், புருஷர்களுக்கு அவசியமான படிப்பு அனைத்தும் ஸ்திரீகளுக்கும் அவ்வளவு அவசியமாகாதென்றும், ஸ்திரீ தர்மம்

என்னவெனில் புருஷனுடைய சொந்த விஷயங்களிலும் இதர பொது விவகாரங்களிலும் அவனுக்கோர் உபகாரியாயிருப்பதே யாகும் என்றும், ஸாவித்ரீ சரித்ரத்தைச் சொல்லி, தன் புருஷனைத்தானே வரிக்கும்படி எத்தகைய ஸ்வதந்தரியாயிருந்தா ளென்றும், புருஷனுக்கு மரணம் வந்த காலத்தில் எவ்விதத்துணையாயிருந்து, தன் சீலத்தாலும், அறிவாலும் மிருத்யு வையும் ஜயித்தாள் என்பதையும் கூறினர்.

அத்தகைய ஆத்மாக்கள் நந்தேசத்தில் விளங்கவேண்டுவோமானல், பால்ய விவாஹத்தால் பிஞ்சிலே பழுத்து பலங்குறைந்தவர்களாயிருக்கும் தாய்மார்களில் எவ்விதம் இருப்பது ஸாத்யம் என்று பரிதபித்து, இந்தியாவும் மற்ற தேசங்களைப்போல் ஓர் ஜனஸமூஹமாக வேண்டுவோமானல், நமது பெண்மக்கள் முற்காலத்து மைத்ரேயி, கார்கீ இவர்களைப் போலவும், நவீனகாலத்து அஹல்யாபாயைப்போலவும் கல்வி பெறவேண்டும் என்றும் கூறி முடித்தனர்.

---

திருவனந்தபுரம்:—அனந்தலாட்ஜ் பிரஹ்மக்ஞான கிளைச்சங்கத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க, பிப்ரவரி௴ 21உயன்று ஸ்ரீமான் வி. ஜினராஜதாஸரவர்கள் விஜயம் செய்தபோது ஸங்கீதம், பஜனைகளோடு நல்வரவேற்கப் பெற்றூர். அன்று சாயங்காலம் 6-15மணிக்கு "புதிய மதத்தின் உற்பவம்" என்னும் விஷயம் உபந்யசித்தார்.

உலகில் தோன்றும் பற்பல மதங்களும் சிலகாலத்திற்குப் பிறகு, ஸாரமற்று சக்கையாய் நிற்கின்றன வென்றும், அல்லது நெகிழ்ச்சியாயிருந்தவை இறுக உரைந்து போகின்றன வென்றும், அப்படி இறுகவே, ஈசனுடைய விளக்கம், சிறைப்படுகின்றதென்றும், எச்சமயம் அவ்விதம் இறுக உறைந்த கட்டியானது தகர்க்கப்படுமோ, அச்சமயமே ஈசுவர பிரகாசத்துடன் மதமானது உலகிற் புதிதாய் உற்பவிக்கின்றதென்றும் கூறினர். திவான் முதலிய உத்யோகஸ்தர்கள் பலரும் இதர கல்விமான்கள் பலருமாகப் பல ஜனங்கள் ஒரே திரளாய்க் கூடியிருந்தனர்.

22-ம் உயன்று காலை 7மணிக்கு ஈ. யஸ். மீட்டிங்கும், 8மணிக்கு டி. யஸ். மெம்பர்களுக்கு ஓர் உபந்யாசமும் செய்தார். அன்று சாயங்காலம் 5-30மணிக்கு "பிரஹ்மக்ஞானமும் தற்காலத்தியர்களுடைய சாஸ்திர ஆராய்ச்சியும்" என்ற ஓர் உபந்நியாசம் செய்தார். பிரஹ்மக்ஞான முறையே அவ்வாராய்ச்சிகளுக்குத் தகுந்த ஸமாதான மளிக்கின்றது என்று நிரூபித்தார். பிறகு இரவு 7-15 மணிக்கு ஈ.யஸ். மீட்டிங்குஒன்று நடந்தது.

மறு நாட் காலை 6-30மணிக்கு ஸ்ரீமாந் வி. ஜீனராஜதாஸரவர்களும், மகா-ஈ-ஈ-ஸ்ரீ ஆர். ஸ்ரீநிவாஸ ஐயரவர்கள் ஆட்டின்கால் என்னும் ஊருக்குச் சென்று கீதவாத்யங்களோடு நல்வரவேற்கப் பெற்று, ரிஷிகளுடைய அநுக்ரஹத்தைப் பிரார்த்தித்து மூல சிலா ஸ்தாபனம்செய்கையில் எல்லோருடையமநங்களும்ஒருமித்து அமைதியாக இருந்தன. பிறகு அரைமணிக்குமேல்"ஆத்ம வித்யை என்பதென்ன" என்ற ஓர் உபந்யாஸம் செய்தார். ஆலய வழிபாடும், யாத்ரை போவதும், பெரிய பூஜாக்ரியைகளையும், ஹோமக்கிரியைகளையும், யாகக் கிரிகளையும் செய்வதும் ஒருபோதும் ஆத்மவித்யையாகாவென்றும், ஈசுவரனுடைய வேலையை, ஈசுவரனுடைய பெயரால், ஈசுவரனுடைய ஸ்ருஷ்டிவர்க்கங்களுக்காக இடை விடாது செய்து வருவதே ஆத்மவித்யையாதும் என்றும் கூறி முடித்தார். தியாகம் ஒன்றே ஆத்மவித்யை என்று கூறி, தியாகத்தின் லக்ஷணங்களையும் விவரித்தார். உடனே திருவனந்தபுரத்திற்குப் புறப்பட்டு, அன்று மத்யானம் மஹாராஜா காலேஜ் பிள்ளைகளின் வேண்டுதலுக்கு இணங்கி, "ஸ்வபாஷையை அலக்ஷ்யஞ் செய்யாமல் நன்கு மதிக்கவும், இந்திய ஸ்திரீகளின் நிலைமையை உயர்த்தவும், தத்தம் அபிருசிக்கும் தகைமைக்கும் ஏற்ற உத்யோகங்களைத் தேர்ந்தெடுக்கவும், பிறகு அவ்வுத்தியோகங்களில் பூர்ணபலத்தோடும் உழைத்து ஸமர்த்தர்களாகவும் வேண்டுமென்றும்" பிள்ளைகளுக்கு ஹிதவசனங் கூறினார்.

அன்று சாயங்காலம் "லோககுருவின் வருகை" என்னும் விஷயம் கடைசியாக பிரஸங்கித்தார். இது வெறும் முரட்டு நம்பிக்கை யல்லவென்று நவீனமான பல ஆதாரங்களுடன் ருசுப்படுத்தி, தற்கால யுத்தத்திற்கு சூசகமான அறிகுறிகள் 100-வருஷங்

கட்கு முன்னமே தோன்றின வென்பதையும் கூறினர். பெரிய அரசர்களும், ராஜ தந்திரிகளும் மந்தராலோசனை நிபுணர்களும், போப் முதலிய மடாதிபதிகளும், அல்லது எந்த புரோகிதரும் தடுக்கமுடியாதபடி எவ்விதம் ப்றபல காரணங்கள் அவர்களுடைய வரம்பை மீறினவைகளாயிருந்தன வென்பதையும் எடுத்துக்காட்டினர். பிறகு முற்காலங்களில் சம்பவித்த இம்மாதிரி கோரமான காலங்களுக்குப் பிறகு மஹான்கள் அவதரித்திருக்கிறதற்கு எற்ப இக்காலத்திலும் அத்தகைய திருவரவை எதிர்பார்ப்பது நியாய விரோதமல்ல வென்றும் முடிவுரை கூறினர்.

கடைசியாக 12மெம்பர்கள் பிரஹ்மக்ஞானஸபையில் ஸ்ரீமான் ராஜா அவர்களால் புதிதாய் அங்கீகரிக்கப் பெற்றனர். இந்த இரண்டரை நாட்களும் திருவனந்தபுர வாசிகள் அனைவோர்களுடைய ஞாபகத்தினின்றும் இலேசாய் அகலாதவிதமாய், அவ்வளவு நித்யகல்யாண சூசகமாய் நிகழ்ந்தன. மகா-ா-ா-ஸ்ரீ ஆர். அனந்தராவ் அவர்கள் கொல்லம்வரை கூடச்சென்று, ஸ்ரீமாந். ராஜா அவர்களைப் பிரயாணப்படுத்தி யனுப்பினர். திருவனந்தபுரத்தில் பிரஹ்மக்ஞானம் விசேஷமாய்ப் பரவுமென்பதில் ஐயமில்லை.

———

வாழைக்கரை:—1916ஞூ மார்ச்சுமீ 18, 19உ களில் நாகப்பட்டணந்தாலூகா வாழைக்கரையில் ஓர் பிரஹ்மக்ஞான ஸபைக் கூட்டம் நடந்தேறியது. தஞ்சாவூர் ஸ்ரீபெஸண்டு லாட்ஜ் கிளைச் சங்கத் தலைவரான பிரஹ்மஸ்ரீ டி. ஆர். ராமசந்திர ஐயரவர்கள் (பென்ஷன் டிப்டிகலெக்டர்) அக்ராஸனம் வகித்தார்கள். மஹான்களுடைய அருளால் சபையானது சுபமாய் நடந்தது.

———

சோரத்துப் பேரியாங்குப்பம்:—இவ்விடத்தில் ஸ்ரீராம லாட்ஜ் பிரஹ்ம வித்தியாசபையின் நான்காம்வருட பூர்த்தியுற்சவம் சென்ற 19உ ஞாயிற்றுக்கிழமை நடந்தேறியது. சபையின் அங்கத்தினர்களும் சபையினிடம் அநுதாபமுள்ள மற்றையோர்களுமான ஸ்திரீ புருடர்களும் இச்சபையின் ஆதரவில் நடைபெறும் பிரைமரி தர்ம வித்தியாசாலையின் மாணவர்களும் சேர்ந்து சுமார் இருநூறுபெயர் சமூகமாயிருந்தனர். பிரஹ்மஸ்ரீ டி.எச் ஜகந்நாத ஐயரவர்களும், பிரஹ்மஸ்ரீ நரசிங்கராவ்அவர்களும் அ. நம்மாழ்வா

ரையாவும் முறையே பிரஹ்ம வித்தியாசபையின் நலங்களையும் அவதாரங்களையும் சகோதரத்துவத்தையும் பற்றி உபந்நியசித்தார்கள். அக்கிராசனம் வகித்த ஜகந்நாதையரவர்கள், இச்சபையின் பரிபாலனத்திலுள்ள பிரைமரி தர்ம வித்தியாசாலையையும் ஸ்ரீராம சகாய நிதியையும் யாவரும் ஆதரித்து உதவிபுரிய வேண்டுமென்றும் பிற்காலத்திற்கிணங்க சிறுவர் சிறுமிகளைப் பயிற்றுவிக்கும் தகுதியை நாம் கைக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லினர். மேலும் விவசாய விஷயமாய்க் கைக்கொள்ளவேண்டிய சில திருத்தங்களைப் பற்றியும் சங்கீதத்தின் அருமையைப்பற்றியும் நரசிங்க ராவ் அவர்கள் இன்புறப் பிரசங்கித்தார். இந்த லாட்ஜில் தற்காலம் பதினெட்டு மெம்பர்களுண்டு. உதயதினை நக்ஷத்ர சங்கத்தின் மெம்பர்களும் பணிவிடைக்காரர்களுமாக பதினைந்து பெயருண்டு. மாணுக்கருள் ஐவர் அன்பு, சிநேகம், ஒப்புரவு, புத்திரர் கடமை, உண்மை என்னும் விஷயங்களைப்பற்றி உபந்நியசித்தார்கள். சிறுவர்களுக்கு பரிசளித்தற்கு புத்தகங்கள் வாங்குதற்காக விழுப்புரத்திலிருந்து வந்த வி. குப்புசாமி ஐயரவர்கள் இரண்டுரூபா நன்கொடையளித்தனர். சிறுவர்களுக்கு சிற்றுண்டி யளிக்கப் பெற்று சபை கலைந்தது.

---

திருநெல்வேலி, மதுரை, திருச்சி:—இம்மூன்று நகர்களிலும் அவ்வவ்வூர்க் கிளைச்சங்கங்களுக்கு ஸ்ரீமான் ராஜா அவர்கள் விஜயம் செய்து, ஆசிர்வதித்து அவ்வவ்வூர்களில் "கடவுள் வழிபாடு," "லோக குருவின் வருகை" "லோகோத்தாரணம்" "பிரஹமக்ஞானம்" முதலிய பல விஷயங்களைப்பற்றிப் பிரஸங்கித்து வந்தார். இவர்கள் தெற்கிருந்து வடக்கு நோக்கிச் செல்லுங்கால், வடக்கிலிருந்து தெற்கேயுள்ள கிளைச்சங்கங்களை யெல்லாம் பார்வையிட்டுக் கொண்டு புரொவின்ஷல் செக்ரிடரி ஸப்ஜட்ஜ் டி. ராமச்சந்திர ராவ் அவர்கள் விஜயஞ்செய்து அரியஉபதேசங்களைச் செய்தார்கள். இவ்வளவு விருத்தாப்பிய தசையில் சற்றும் மனம், மெய், மொழி தளராது உழைக்கும் வன்மைதான் எம்மட்டு என்று யாரும் இவரை அதிசயிக்காமலிருக்கமுடியாது. நமது சபைத்தலைவர்கள் இவ்வளவ வேகத்தோடு உழைத்து வருவதையே நாம் இலக்ஷ்யமாகக்கொண்டு, உற்சாகத்துடன் பரோபகாரார்த்தம் உழைக்கவேண்டும்.

450

# புத்தக வரவு.

---

**நீதி சாஸ்திரம், தாத்பர்யதீபிகை—P. K. ஜேஸிங் F. T. S:-** இது ஒரு சிறிய அழகான புஸ்தகம். ஆனால் ஸம்ஸ்கிருத சுலோகங்கள் தமிழ் லிபியில் அச்சிடப்பட்டிருக்கின்றன. சமஸ்கிருதம் அறியாதவர்கள் இதை வாசிப்பார்களானால் பிசகான உச்சரிப்புக் களஞ்சியங்களாவார்கள் என்பதில் ஐயமில்லை. ஸம்ஸ்கிருதம்தெரிந்தவர்கள்கூட தமிழில் எழுதியஸம்ஸ்கிருதசுலோகங்களைப்படிப்பது சிரமமாயிருக்கின்றது. ஆகையால் கிரந்த லிபியில் சுலோகங்களை எழுதுவதே இந்தமாதிரி புத்தகங்களுக்கு சிலாக்கியத்தைத் தரும். மேலும் தமிழில் அச்சிட்டிருப்பதில் மொழி பெயர்ப்பிலும் சுலோகங்களிலும் அநேக அச்சுப்பிழைகளிருக்கின்றன. நீதிசாரத் திரட்டு ஒருவரால் எழுதப்பட்டதன்று. ஆனால் பற்பல புஸ்தகங்களிலிருந்து பல நீதிவசனங்களை யெடுத்து தொகுக்கப்பட்டதேயாம். ஆகையால் முற்காலத்தில் தொகுக்கப்பட்டதொகையில் பலசுலோகங்கள் ஸ்திரீஜனங்களை இகழ்ந்து கூறப்பட்டுள்ளனவாயினும் இக்காலத்தில் பிரசுரிக்கப்பட்ட நீதிசாரத்தொகையில் அந்தசுலோகங்களை விலக்குதலே மேன்மையாம். இந்த புத்தகம் பிரஹமக்ஞான சபை அங்கத்தினர் ஒருவரால் வெளியிடப்பட்டிருப்பதாகையால் அவ்வகை சுலோகங்கள் இல்லாமலிருந்தால் நமக்கு சந்தோஷமாயிருக்கும்.

---

**துசேலமுனிவர் சரித்திரச் சுருக்கம்:—**தூத்துக்குடி ரா. கந்தசாமிபிள்ளையால் இயற்றப்பட்டது. மிகவும் அழகாகவும் நன்றாகவும் எழுதப்பட்டுள்ளது. இதைவிட எளியநடையில் இக்கதையையும் இதுபோன்ற ஏனைய புண்ணிய சரிதங்களையும் எழுதி பிரசுரித்தால் சிறுவர் சிறுமிகட்கு மிக்க பயன் தரும். இதன் விலை 0—0—9.

ஆனால் இத்தகைய புத்தகங்கள் அதிகமாகச் செலவாகும் வண்ணம் விளம்பரம் செய்தால் அல்லவோ பலர்க்கு உபயோகப்படும்.

---

விவேகோதயம்:—மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத் தலைவர் ம. கோபாலகிருஷ்ண ஐயரவர்களால் 1916ஆ பிப்பிரவரிமீ முதற்கொண்டு இந்த மாதாந்தர பத்திரிகை பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. வருஷம் ஒன்றுக்கு பெண்பாலர்க்கும் மாணுக்கர்க்கும் ரூ 1—0—0. சந்தா. மற்றவர்க்கு ரூ 1—8—0 சந்தா. தமிழ் பாஷையின் விருத்திக்கும், நம்நாட்டில் கல்வி பாவுவதற்கும், விவேகம் விருத்தியடைவதற்கும் ஒரு பத்திரிகையால் செய்யக்கூடிய பேருதவியனைத்தையும் செய்ய உத்தேசிக்கின்றது. பத்திராசிரியருடைய வல்லமையாலும் முதல் சஞ்சிகையில் தோன்றும் விஷயங்களை பார்வையிட்டும் இந்த பத்திரிகை தமிழகத்தில் எல்லோராலும் பரிபாலிக்கப்படும் என்று எண்ணத் துணிகிறோம். அஞ்ஞானமாகிய அந்தகாரத்தை நீக்க எத்துணை விளக்குகள் கிடைத்தாலும் சிலாக்கியமன்றோ! இப்பத்திரிகைக்கு நல்வரவு கூறி அதன் அபிவிருத்தியைக் கோருகிறோம்.

---

"கர்மபால போதம்" அன்னிபெஸண்டு அம்மையாரின் சிறு துண்டு பத்திரிகையின் மொழி பெயர்ப்பு.—திருமியச்சூர் பிரமஞானசபை காரியதர்சி ஆர். சுவாமிநாதையர். "பஹிரங்க ரகசியம்" "வேதாந்தம்" சுவாமி விவேகாநந்தருடைய உபந்யாசங்களின் மொழி பெயர்ப்புக்கள்.—சிவகங்கை ராமகிருஷ்ண விவேகாநந்த சபை.

தற்காலத்தில் முக்கியமாய் சாமான்ய ஜனங்களும் அறியவேண்டிய விஷயங்கள் பெரியார்களால் ஆங்கிலத்தில் வரையப்பட்டிருப்பதால் அவைகளை யாரும் அறியும்வண்ணம் தமிழில் மொழி பெயர்த்து பிரசுரம் செய்வது மிக்க நன்மைபயக்கும் தேச கைங்

கார்யங்களில் ஒன்று. ஆகையால் இங்கிலீஷ் பாஷையறியாதவர்களுக்கு மேற்கூறிய முக்கியமான புத்தகங்களை வெளியிட்டது மெச்சத் தகுந்ததே.

தர்ஜுமா செய்யப் புகுந்தவர் கவனிக்கவேண்டிய விஷயங்களாவன:—மொழி பெயர்க்கப்படும் புத்தகத்தில் கண்ட விஷயங்களைத் தாம் நன்றாயறியவேண்டும். அறிந்த பின்னர் எந்த பாஷையில் அக்கருத்துக்களை வெளியிட உத்தேசமோ அந்த பாஷையில் வழங்கும் வார்த்தைகளை நன்றாய் அறியவேண்டும். ஒருவேளை அந்தப்பாஷையில் வழக்கிலில்லாத வார்த்தைகளை பிரயோகிக்க வேண்டியிருந்தால் அந்த பதங்களை சிருஷ்டித்து அதன்பொருளை சில வார்த்தைகளால் விளக்கிக் காட்டவேண்டும். வார்த்தைக்கு வார்த்தையாய் மொழி பெயர்த்தல் அவ்வளவு அவசியம் அன்று. கூடுமானமட்டில் அசலில் உள்ள கருத்துக்கள் அந்த பாஷையறியாதவர்களுக்குத் தென்படுமாறு தெளிவாய்ச் சொல்லப்படவேண்டும் மொழி பெயர்ப்பை வாசிக்கிறோம் என்ற புத்தி படிப்போருக்குத் தோன்றாதபடி இயல்பான தெளிவான நடையில் எழுதவேண்டும். இல்லாவிடில் தமிழ்மொழி பெயர்ப்பின் பிரயோஜனம் கிடைக்க மாட்டாது. ஆங்கிலத்தை மொழி பெயர்க்குமிடத்து ஆங்கில பதங்களையாவது அக்ஷரங்களையாவது ஆங்கில எழுத்துக்களிலேயே உபயோகிப்பது சரியற்றதாகும். ஏனெனில் ஆங்கில எழுத்து அறியாதவர்க்கென்று அல்லவோ மொழிபெயர்க்கப்பட்டது. மேலும் முதல் பிரயத்தினத்திலேயே சரியானபடி மொழிபெயர்க்கும் சாமர்த்தியம் வாய்த்தலரிது.

மேற்கண்ட பின்னிரண்டு புத்தகங்களும் நன்றாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. கடைசியாய் கண்டது மிக்க தெளிவாய் எழுதப்பட்டுளது. இத்தகைய நற்காரியத்தில் புகுந்த சிவகங்கை ராமகிருஷ்ண விவேகாநந்த சபையார் இனிமேலும் அநேக புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்ப்பார்கள் என்று எண்ணுகிறோம். முதற்கூறிய துண்டுப் பத்திரிகையானது தமிழ்மட்

டும் அறிந்த ஒருவனுக்கு வேறு உதவியின்றி படிக்கக் கூடியதா யில்லையென்று நாம் சொல்லுவது அந்தமொழி பெயர்ப்பாசிரியரை அதைரியப் படுத்துவதற்காகக் கூறவில்லை. மேற்கூறிய விஷயங் களை மனதில்வைத்து இனி தர்ஜுமாசெய்ய முன்வந்தால் அது பயன்படும் என்று திண்ணமாய் எண்ணுகிறோம். (R)

---

கரிசலை மூந்நூறு:—இதை யெழுதியவர் கும்ப முனிவரின் சிஷ்யரும், தருணுக்ய முனிவரின் கபாலத்தினின்று தந்திரமாய்த் தேரையை விடுவித்ததால் தேரையர் என்னும் பெயர்பெற்றவரு மேயாவர். இந்நூல் மணி மந்தர ஔஷதம் என்னும் மூவகை லக்ஷணங்களை முன்னிட்டும், கர்த்தா கூறியுள்ளபடி வடமொழியி லுள்ள ஆயுர் வேத நூல்களையே பெரும்பாலும் தழுவியும் எழு தப்பட்டிருக்கின்றது. வெகு காலத்திற்கு முன்னமே ஆயுதங்கள், அட்டை, கொம்பு (பீச்சாங்குழல்) காரச்சீலை முதலியவைகளால் ரணசிகித்ஸை நடந்துவந்ததென இந்நூலால் நாம் அறியலாகும். தென் மொழிநூல் எதிலும் இதுவரை வெளிவராத அப்ரகத்தின் 4 ஜாதிகள் இதில் கூறப்பட்டிருப்பதோடு வடமொழிப்பரிபாஷை களும் பல ஆங்காங்கு புகுக்கப்பட்டுள. இன்னும் சில திராவகங்க ளே, முப்பூ, போன்ற முக்கிய குருவாகக் கூறப்பட்டிருக்கின்றன. அகஸ்தியர் தன் பரிபாஷையில் சிறிது மறைவாகக் கூறும் சவர்க் கார முடிப்பு இதில் வெளிப்படையாய்ச் சொல்லப்பட்டிருக்கின் றது. இந்நூல் இப்புஸ்தகத்தில் முடிவுபெற்றதாகத் தெரிய வில்லை.

வாத வைத்ய விஷயங்களில் சிரத்தையுள்ளார் பலரும் பார்க்க வேண்டிய முக்ய கிரந்தங்களுள் இது முதன்மை பெற்றதென் றே சொல்லலாம். இது சாதாரண வைத்ய நூல்களைப் போலல் லாமல் உயர்காகிதத்தில் பொருட் பேதமின்றி அச்சிடப்பட்டிருக் கிறது.

இதன் விலை அணு 0—12—0.

வேண்டுவோர் சென்னை கோமளேசுவரன் பேட்டை அம்பா விலாஸ் புத்தகசாலைக்கு எழுதலாம். (B. A. Gopala Krishna)

4-54-

## தியானக்கிரம விஷயம்.

## டிசம்பர் மாசம்.

3-வது வாரம்:—ஆசையால் தயாராயிருங்கள். நீங்கள் நினையாத வேளையில் பிரபு வருவார். (லூக்கா XII-40) அப்படியானால் சீக்கிரம் வாருங்கள் என்று நான் சொல்ல வேண்டுமே யல்லாமல், நான் என் ஆடைகளைச் சுத்தப் படுத்தி உடுத்திக் கொள்ளும் வரை காத்திரும் என்று சொல்லமுடியாது போலிருக்கிறதே.

4-வது வாரம்:—ஜகத்குருவாகிய அரசனை அவரது பூரண அழகோடு, காண்பாய். (ஈசாயா XXXIII, 17)

இப்பெரிய அரசர் பரமசாந்தராய் ஒரு கோவேறு கழுதையின்மீது ஏறிக்கொண்டு உன்னிடத்துக்கு வருவார். (மத்தேயு XXI, 5)

பரமர் வருந்தருணத்தில் விழிப்போடு காத்திருக்கும் ஊழியர்கள் அவரதநுக்ரஹத்தைப் பெறுகிறார்கள். அவர்களே உண்மை ஊழியர்களாவார்கள். (லூக்கா XII-37-38)

5-வது வாரம்:—பக்தியும், மனஉறுதியும், சாந்தமும் நம்முடைய தினசரி நடக்கையில் முக்ய அம்சங்களாக அமையும்படி முயற்சிப்போமாக. (உதயதிசைநக்ஷத்திர சங்கம்)

ஒரு ஆட்டிடையன் போல், அவர் தம்மைச் சரணமடைந்தோரை ரக்ஷிப்பார். தம் முந்தை யாடுகளைக் கையால் தூக்கி, மார்போடணைத்துச் சுமந்து செல்வார். (ஈசாயா XL, 11)

### தினசரி அப்பியாசம்.

(1) பரமாசார்யர் திடீரென்று வரக்கூடுமாகையால் அப்பொழுது அவர் நீ தூங்குவதைப் பாராதபடி விழித்திரு. (மார்க்கு XIII—36)

நீ தேடுகிற பிரபு திடீரென்று அவரது கோவிலுக்கு வருவார். (மலாச்சி III—1)

(2) உயர்வற உயர் நலம் அமைந்த உம்முடைய வாக்கிலிருந்து வெளிப்படும் ஞானமொழி ஒவ்வொன்றும் எல்லாத் திசைகளிலும் பரவி எல்லா வஸ்துக்களையும் மிகுந்த பல பராக்ரமத்துடன் இனிய நல் வழியிலேயே நேர்மையாய் நடத்துகிறது. ஹே! பரமகுருவே! எங்களுக்கு ஞான வழியைக் காட்டியருளும். (ரோமன் ப்ரீவியரி)

(3) தர்மம் அழிந்தும், அதர்மம் மேலிட்டும் வருகிற காலத்தில் நானே அவதாரஞ் செய்கிறேன். (பகவத் கீதை IV—7)

(4) பகவான் புத்தர் சொன்னதாவது:—இந்த பூமிக்கு வந்த முதலாவது புத்தர் நானல்ல, நான் தான் கடைசியாய் வந்திருக்கிறவனென்பதுமல்ல. இனிவருங்காலத்தில் அதற்குரிய வேறொரு புத்தர் வருவார். நான் உங்களுக்கு கற்பித்த நித்தியமான உண்மைகளையே, அவரும் வந்து எடுத்துரைப்பார்! (புத்தருடைய உபதேசம்)

(5) கடவுளுக்குத் தமது தூதனை அனுப்பப் படவேண்டியவர் யாரென்றும், எத்தகையரென்றும் நன்றாய்த் தெரியும். (கொரான்)

(6) நல்லவர்களை ரக்ஷிப்பதற்காகவும் கெட்ட சுபாவமுள்ளவர்களை (கெட்ட செய்கையுள்ளவர்களை) அழிக்கவும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காகவும் நான் யுகந்தோறும் அவதரிக்கிறேன். (பகவத்கீதை IV-8)

(7) நீ ஈசுவரனின் திருவருளைப் பெறுவாய். அவருடைய அளவிறந்த சக்தியால் நீயும் சக்திமானவாய் (லூக்கா I, 35)

ஒளியானது இருளிலேயும் பிரகாசிக்கிறது. இருளானது அதைத் தெரிந்து கொள்ளவில்லை. (ஜான் I, 5)

(8) ஜகத்குருவின் வருகைக்கு, அவர் வழியைச்சீர்ப் படுத்துங்கள். அவருக்கு வழியை நேர்மைப் படுத்துங் கள். (மத்தேயு III, 3 R. V.)

நற்செய்திகளைக் கூறினவருடைய பாதங்கள் மலைக ளின்மேல் எவ்வளவு அழகாக இருக்கின்றன. (ஈசாயா iii—7)

"இதோ கடவுள்," என்று சத்தமிட்டுப் பிரஸித்தப் படுத்து. பயமும், கூச்சமும் வேண்டாம். உன் முழுப் பலத்தோடும் கோஷிப்பாயாக. (XL—9)

(9) என்னுடைய ஈசுவரத் தன்மையை அறியாமல் நான் மானிட வேடம்பூண்டிருப்பதை வைத்து மூடர்கள் என்னை அவமதிக்கிறார்கள். (பகவத்கீதை IX—11)

(10) இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்க ளுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தியிருக்கிறீர் (லூக்கா X—21)

(11) வௌவால் சூரியப் பிரகாசத்தில் வர இயலா விட்டால், சூரியன் ஒளியற்றவரென்று சொல்லலாமா? (ஸாதி)

(12) நம்முடைய ஜகத்பிதா நம்மை அவரிடத்து நிலை பெற்றிருக்க வேண்டுகிறாரே தவிர வெறும் புஸ்தகத் தை மட்டும் வாசித்து பாண்டித்யம் பெறுவதற்கல்ல. (வில் பெர்போர்ஸ்)

வேத வாக்கியங்களைப் படித்து விடுவதால் நீங்கள் நித்ய வாழ்க்கையை யடைந்து விடலாமென்று எண்ணுகி றீர்களே யொழிய நித்ய வாழ்க்கையை என் மூலமாயல்லா மல் பெற முடியாதென்பதை உணர்கிறீர்களில்லை. (ஜான் (V—39 R. V.)

(13) பகவான் புத்தர், "மைத்ரேயர்" என்றழைக்கப் பெறுவர். மைத்ரேயர் என்றால் "பக்ஷமுள்ளவர்" என்று அர்த்தம். (புத்தர் உபதேசம்).

(14) ஓர் ஆட்டிடையன்போல் தம்மைச்சரணமடைந்தோரைப் போஷித்தும், ரக்ஷித்தும் பாதுகாத்தும் அவர் தம் மந்தை ஆடுகளைக் கரத்தால் எடுத்து மார்போடணைத்துச் சுமந்துசென்று, கறவை ஆடுகளைக் குட்டிகளுடன் மெதுவாய் நடத்துவார். (ஈசையா 40-11.)

(15) நீங்கள், நினையாத நேரத்தில் அவதார புருஷர் வருவாராகையால் நீங்கள் ஸித்தமாயிருங்கள்.

(16) இராக்காலத்தில் நீ எதிர்பாராத சமயத்தில் தன் கருத்தையே குறியாகக்கொண்டு வரும் திருடனைப் போல், அவதார புருஷரும் அவரது உயர்ந்த கருத்தையே நிறைவேற்றுதற் பொருட்டு உங்களுக்குள் தோன்றுவார். முற்காலத்திலும் இவ்விதமே நடந்திருக்கிறது. வருங்காலத்திலும் இவ்விதமே நடக்கும். (எட்வார்டு கார்பெண்டர்)

(17) மேகமண்டலத்திலிருந்து திடீரென்று மிகுந்த ஜோதிர்மயமான பெரிய காட்சியுடன் பரமாசார்யர் வருவாரென்று நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் நாம் அவரை, எளிதில் கண்ணேறிட்டுப் பார்க்கும்படியாக, தம்முடைய அளவிறந்த தேஜஸை, இத்தூலவுலகிற்கேற்ப மட்டுப் படுத்திக்கொண்டுதான் வருவார் (ஸநாதந ஞானமார்க்கம்.)

(18) என்னிடத்தில் பூர்ணமான ஸமாதானம் ஏற்பட்டால் மட்டும் உம்முடைய வரவு அறியப்படும். (கவெண்ட்ரீ பாட்மோர்.)

(19) அக்ஞானத்தில் மூழ்கிப் பலம் குன்றிய அன்பனே! நீ தேடுகிறவர் நான் தான். நீ அன்பு செலுத்திய தக்ஷணமே நான் விரைந்தோடி வந்து விட்டேன். (பரலோக கோஷம்)

(20) உன் முன்பாக விருக்கும் என்னைப் போலவே வரப்போகும் பரமாசார்யரும் ஓர் மனிதனாகவே தோன்று வார். அவரும் கை, கால், முகம் முதலியவைகளோடு கூடிய மனிதரே யாவர். உன் சொற்ப அன்பிற்கு ஈடாக, என் றென்றைக்கும் சாசுவதமான அவரது பேரன்பைப் பெறு வாய். அவர் முகமலர்ச்சி தான் இவ்விதமென்றால், அவர் திருக்கரங்களோ, நித்யவாழ்வை யடைதற்கேற்ற, புதிய மார்க்கத்தில் நீ பிரவேசிக்குமாறு, மூடிய கதவுகளைத் திற ந்துவைக்கும் இயல்பினவன்றோ.

(21) எப்பொழுது உலகமுழுதும் பாபத்திலேயே உழன்று வருகிறதோ, அப்போதுதான் பரமாசார்யர் தோன்றுகிறார். அவர் தங்குவதற்கு நல்ல இடங்கொடாமல் மிலேச்சனை அந்நியனைப்போல், பிறவியிலேயே தாழ்மை என்னும் குணம் நிறைந்து, மாட்டுக் கொட்டத்தில் பிறந்த மஹா புருஷரை, நாமும் நேரே அறிந்து கொள்ளாமல், மாட்டுக்கொட்டத்தில் வரவேற்று உபசரிக்கிறோம். இவ் விதமின்றி அவரைத் தெரிந்து கொள்ளும் தகைமையைப் பெற வேண்டும்.

(22) நீங்கள் இப்போது பிரத்யக்ஷமாய்ப் பார்க்கும் பரிசுத்தமான விஷயங்களைக் காணும் கண்களே கண்கள். ஏனெனில் தற்காலம் அத்தகைய சுபசூசகமான காலம். அநேக ரிஷிகளும், ஆசார்களும் இந்தக் காலத்தில் ஜன்மமெ டுத்து, நீங்கள் பார்த்தும் கேட்டும் வருகிற விஷயங்களைப் பார்க்கவும் கேட்கவும் பிரியங்கொண்டுளார். (லூக்கா, 10 அத்-23)

(23) ஒரு பெரும் வெள்ளம் வருகையில் சிறு ஓடை களும் பள்ளங்களும் தாமாகவே நிரம்பிவிடுகின்றன. அதே மாதிரியாக ஒரு அவதார புருஷர் வரும் காலத்தில் ஞான வெள்ளமானது உலகத்தில் பரவி அவர் ஸந்நிதி மாத்ரத் தில் ஞானத்தை யடைகிறார்கள். (ஸ்ரீராம கிருஷ்ணர்)

(24) இதுதான் குறிப்பிட்ட காலம்! கவனி!! இதுதான் முக்தியளிக்கும் காலமுமாகும். (II கொரிந்தியர்கள் ii, 2)

(25) சிருஷ்டி கர்த்தாவாகிய ஈசுவரன் நம்மோடிருக்கிறார்.

(26) அவர் வருவது நிச்சயம். ஞானிகளை வருந்தியழைக்கும் சப்தங்கள் ஆயிரக்கணக்காக விருந்தபோதிலும், செவிடர்களுக்குக் கேட்கின்றனவல்ல. அவர் நிச்சயமாகவே வருகிறார். உலகமும் சந்தோஷிக்கின்றது. அவர் வருகை நிச்சயமென்று உறுதி கொள்கிறவர்களே சந்தோஷமடைகிறார்கள்.

(27) இந்த நன்னம்பிக்கையானது உதயமாகுமுன் வெகுதூரத்தில் மினு மினுக்கையில் என்ன ஆச்சரியம்! மனச்சஞ்சலம் அடங்குகின்றது. மௌனம் சித்திக்கின்றது. அவரைக் காணும் வரை என் ஆத்மாவானது மோகிக்கின்றது, இந்திரியங்களின் வெளி நோக்கானது குறைகின்றது, உடனே உள்முகமாக என் ஆத்மா மட்டும் சலிக்கின்றது. மோஹிக்கின்றது, கடைசியாய் அவர் மௌனவாக்கை இரகஸ்யமாய்க் கேட்கின்றது. (மயர்ஸ் ஸெண்ட் பார்)

(28) என் பசுக்கள் என் குரலைக் கேட்டு என்னைப் பின் பற்றுகின்றன. (ஜான் X, 27)

நான் போகும் பக்கம், என் குழந்தைகள் எல்லோரும் என்னையறிவார்கள். பூலோகத்தினின்று, கேட்கும் இனிய கானங்களெல்லாம் என் குழந்தைகளின் கானங்கள். இராப் பகலாக அவர்கள் பாடிக்கொண்டேயிருக்கிறார்கள்.

நீ யாராயிருப்பினும், என்னைப் பார்க்கும் படியாக உன் கண்களின் மாயாமயமான திரை நீங்கிய வளவில், நீ அநுக்ரஹம் பெற்றவனேயாவாய்.

29. பக்தியும், மநஉறுதியும், சாந்தமும், நமது தினசரி நடவடிக்கையில் முக்ய அபசங்களாக அமையுமாறு நாம் முயற்சிப்போம். (உதயதிசை நக்ஷத்ர சங்கம்.)

30. உதய ஸூர்யனே! ஹெ! நித்யபிரகாச! ஹெ! ஸத்யபிரகாச! அக்ஞான இருளிலும், மரண பயத்திலும் தத்தளிக்கும் ஜனங்களுக்கு உள்ளொளியை யருளுவதற்கு வாரீர். (ரோமன் ப்ரீவியரி.)

31. ஈசுவரன் நாமத்தால், ஈசுவர ஆக்ஞையைக் கொண்டுவரும் அரசன் ஈசுவர அநுக்ரஹம் பெற்றவர். (லூக்கா XIX—38.)

அவரது பரிசுத்தமான திருநாமம் எக்காலத்தும் இவ்வுலகில் நிலைத்திருக்கட்டும், பூலோகமுழுமையும் அவர் மஹிமையே நிரம்பி யிருக்கட்டும். (ஸங்கீதம் LXXII-19)

கே. எஸ். ராமசந்திர ஐயர்.

---

## நன்மொழி.

ஒழிந்தன காலங்க ளூதியும் போயின<br>
கழிந்தன கற்பனை நாளுங் குறுகிப்<br>
பிழிந்தன போலத்தம் பேரிட ராக்கை<br>
யழிந்தன கண்டமே றமறி யாரே.

திருமந்திரம் (261).

461

# சர்வதேள் விஷ சஞ்சீவி.

## கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!

விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்!!

குணமில்லாவிட்டால்

## ரூபாய் 100 இனும் கொடுக்கப்படும்!!!



நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம பொறுக்க முடியாயல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி,நாம் அதிககஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்தமருந்து கண்டுபிடித்திருக்கிறோம் இது அநேக ஐரோப்பியடாக்டர்களாலும், தமிழ்வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப் பெற்றது. எமது மேற்கண்ட லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷசஞ்சீவியை தேள் கொட்டின இடத்தில் உபயோகிக்க உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச்செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி,நாய், பூரான், செய்யான், பாம்பு, நண்டு, துறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துகள் தீண்டினபோதிலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குண மடையலாம்.

மேற்சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில், பணம் வாபீஸ் செய்துவிடப்படும்.

இந்த லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள், இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொ வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. ஏனென்றால், ஓர் மனிதனை இரவில் 12-மணிக்கு நித்திரையில் விஷந்தீண்டிவிட்டால், அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைபட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| விலை பாக்கெட் 1-க்கு ரூ | 0—8—0 |
| டசன் 1-கு ரூ | 5—0—0 |

விலாசம்:—வி. ஏ. எஸ். பாணி,

நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

462

# அவசியமான அபூர்வ ஔஷதங்கள்.

## ஸ்ரீ மதனானந்தம்.

தாதுபுஷ்டி காரியான இந்த சாஸ்திரோத்தம லேகியமானது, ஜனனேந்திரிய சம்பந்தமாய் உண்டாகிற, இந்திரிய நீர்த்தல் ஸ்வப்னஸ்கலிதம், திரிதஸ் கலிதம், மேஹம். மதுமேஹம், முதலியவைகளையும், சுவாஸ சம்பந்தமாய் உண்டாகிற, க்ஷயம். சுவாஸகாசம், முதலியவைகளையும் தஹனங்கங்கள் சம்பந்தமாய் உண்டாகிற, அஜீரணம், அக்னிமாந்தம், கிரகணி அதிசாரம், முதலிய பலவிதமான நோய்களையும் துலைத்து. வீரிய விருத்தி, ஞாபகசக்தி, இந்திரியக்கட்டு, ஜீர்ணசக்தி, தேகபலம், மனோத்ஸாகம், தேககாந்தி, பார்வைக்கு கூர்மமதை, மிருதுவனதொனி முதலியவைகளை கொடுப்பதும் ஸ்திரீகளுடைய சூதக சம்பந்தமான வியாதிகளை விலக்கி அனேகம் பிள்ளைகளின் மாதாவாசகி வைப்பதுமான இச்சிறந்த ஔஷதம் பெட்டி 1-க்கு ரூ 1—8—0.

## வாத விமர்த்தனம்.

நடுக்குவாதம் முடக்குவாதம், தலைநோய்,இடுப்புவலி, கை கால் பிடிப்பு ஜலதோஷம், கை கால் குளிர்ச்சி, இருமல், தேள்கொட்டு விஷம், பல்நோய், முதலானவைகளுக்கு இத்தைலத்தில் சிறிதெடுத்து நோயுள்ளவிடத்தில் நன்றாய் தேய்த்து கம்பளித்துணியால் அவ்விடத்தை சுற்றி வைக்க உடனே சுகமாகும். விலை புட்டி 1-க்கு அணா 8.

## தத்ரு நாசகம்.

தேகத்தில் இடுக்கான இடங்களில் உண்டாய் அதிவேகமாய் தேகம் முழுதும் பரவுவதும் ஓயாது நமைச்சலைக் கொடுப்பதுமாகிய மேசப்படை. தடிப்படை, தேமல், முதலிய எல்லாவித சர்ம வியாதியையும் அடியோடு துலைக்கக்கூடிய திவ்விய ஔஷதம் புட்டி 1-க்கு அணா 4.

## கரப்பன் பூச்சி நாசனி

வீடுகளில் உபத்திரவகரமாயுள்ளதும் விசேஷமாய் பண்டசேகர அறை சமயல் அறை முதலிய இடங்களில் ஆகாரசேகரப்பொருள் முதலியவைகளை நாசப்படுத்துகிற அருவருப்பான கெட்ட கரப்பன் பூச்சிகள் (Cochrochs) இருக்குமிடத்தில் இப்பொடியை போடுவதால் இவைகள் அடியோடு துலைந்துபோம். கெட்டி 1-க்கு அணா 4

## சொறிக்களிம்பு

விசேஷமாய் கை விரல்களுக்கிடையில் கண்டு தேகம் முழுவதிலும் பரவுவதும் ஸதா நமைச்சலெடுத்து ஆளை மெத்த கஷ்ட ஸ்திதியில் வைத்துக்கொண்டிருப்பதுமாகிய சொறிசிரங்கு, கடி முதலிய சர்மநோய்களை உடன் பறக்கடிப்பதில் சிறந்தது

## சுகந்த சேகரம்.

இது அதி மனோஹரமான பரிமளத்தோடு கூடின சந்தனக் கூட்டு அம்பர், கஸ்தூரி, குங்குமப்பூ முதலிய விலையேறின சிரேஷ்டமான சுகந்த வர்க்கங்களைச் சேர்த்து தயாரித்துள்ளது. இந்த சூர்ணத்தில் கொஞ்சமெடுத்து. சாதா சந்தனத்துடனாவது அல்லது, பனி நீரிலோ அல்லது சுத்த சலத்திலோ குழைத்து தேகத்தில் பூசிக்கொள்வதால். வியர்வை நாற்றம் முதலியவைகளை நீக்கி மனோஹரமான பரிமளத்தையும், தேகத்திற்குக் குளிர்ச்சியையும் கொடுக்கும். உற்சவ காலங்களிலும், கலியாண காலங்களிலும், எவ்விதம் அவசியமானதோ அதுபோலவே இக்கோடை காலத்திற்கும் மிகவும் அவசியமானது. புட்டி 1-க்கு அணா 8.

**P. A. Iyer,**
*Pallavoor, Palghat Malabar,*

ப. அ அய்யர்,
பல்லவூர் பாலக்காடு, மலபார்.